ANGLICAN COMMUNION
IN OVER 165 COUNTRIES

# ஆங்கிலிகன்கள் நம்புவது என்ன?

ஆங்கிலிகன் மற்றும் எக்குமெனிகல்
அறிக்கைகளிலிருந்து கிறிஸ்தவ
கோட்பாட்டிற்கான ஒரு ஆய்வு வழிகாட்டி

**KERALA UNITED THEOLOGICAL SEMINARY**
Kannammoola, Thiruvananthapuram, Kerala, India

# ஆங்கிலிகன்கள் நம்புவது என்ன?

# ஆங்கிலிகன்கள் நம்புவது என்ன?

(ஆங்கிலிகன் மற்றும் எக்குமெனிகல் அறிக்கைகளிலிருந்து
கிறிஸ்தவ கோட்பாட்டிற்கான ஒரு ஆய்வு வழிகாட்டி)

மொழி பெயர்த்தவர்
முனைவர் கு.ஜி. ஹேம்லின்
திருமதி ஞானப்பிரியா D.

ஆங்கிலிக்கன் ஐக்கியம்
165 - நாடுகள்

**கே.யூ.தி.செ. பப்பிளிகேஷன்ஸ்**
திருவனந்தபுரம்

Tamil

**ANGLICANKAL NAMPUVATHU ENNA?**
(Study Material)

**WHAT DO ANGLICANS BELIEVE?**
**A STUDY GUIDE TO CHRISTIAN DOCTRINE FROM ANGLICAN AND ECUMENICAL STATEMENTS**
Translation: Dr. G.J. Hamlin Ph.D., *Nagercoil* & Mrs. Gnanapriya D., *Tiruppur*

Published by
THE KERALA UNITED THEOLOGICAL SEMINARY PUBLICATIONS
Tel.: +91 99451 28026, +91 94976 38904
Email: kutseminary@gmail.com
Website: www.kuts.edu.in

© Reserved

First Impression: May 2021
Copies: 1000

Layout: Bejoy Burnabas J.
Typesetting& Printing: DANNIES DESIGNS, TVPM

Price: **Rs. 100/-**

# முன்னுரை

“ஆங்கிலிகன்கள் நம்புவது என்ன?” என்பது ஆங்கிலிகன் மற்றும் பொதுவான திருச்சபைகளின் அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்ட கிறிஸ்தவ கோட்பாட்டிற்கான ஒரு ஆய்வு வழிகாட்டியாகும். இதன் தமிழ் பதிப்பை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், ஏனெனில் கோட்பாடுகளின் ஆய்வு நிச்சயமாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை அவரது சீடர்களாக உருவாக்கவும், அவருடன் இணைந்து பயணிக்கவும் உதவும்.” “இறைவன் மீது நமக்கு நம்பிக்கை இருக்கும்போது, அவர் நம் வாழ்வில் செய்யும் மாற்றங்களைக் காணத் துவங்குவோம்,” என்று மார்ட் டிஹான் கூறுகிறார். இந்த ஆய்வு நம்மை நம்பிக்கையுடன் முன்னேறத் தூண்டும் என்று நம்புகிறோம்.

இந்த ஆய்வு வழிகாட்டியானது அனைவருக்கும் குறிப்பாக அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று இறையியலாளரும் தலைவருமான அருள்திரு. கேனன் டாக்டர் **ஸ்டீபன் ஸ்பென்சர்** *(Rev. Canon Dr. Stephen Spencer)* விரும்புகிறார். அதனால்தான் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து எங்களுக்கு கிடைத்த ஆதரவு மற்றும் ஊக்கத்திற்கும், அவருக்கும் ஆங்கிலிகன் ஐக்கியத்திற்கும் நன்றி கூறுகிறோம்.

சிறப்பாக மொழிபெயர்த்த முனைவர் கு.ஜி. ஹேம்லின், ஆங்கில உதவி பேராசிரியர், மகளிர் கிறிஸ்தவ கல்லூரி, நாகர்கோயில் மற்றும் ஆசிரியர், திருமதி. டி. ஞானப்பிரியா, திருப்பூர்

அவர்களுக்கும், புத்தகத்தின் தொழில்நுட்ப பரிமாணத்தை செய்த திரு. பிஜாய் பர்ணபாஸ் மற்றும் திரு. டீப்சன் தேவ் ஆகியோருக்கும் நன்றி கூறுகிறோம். கேரள ஐக்கிய இறையியல் கல்லூரியின் வெளியீட்டுக் குழுவானது ஆங்கிலிகன் ஐக்கியத்தின் மேலான ஆதரவுடன் இதை வெளியிடுகிறது. இந்த ஆய்வை ஒரு பரந்த வாசிப்பு மற்றும் ஆய்வுக்காக முன்வைக்கிறோம்.

**அருள்திரு. டாக்டர் எல்.வி. பிபின்லால்**
கன்வீனர், வெளியீட்டுக் குழு

**அருள்திரு. டாக்டர் சி.ஐ. டேவிட் ஜாய்**
முதல்வர், KUTS

# உள்ளடக்கம்


அறிமுகம் 9

I. **கோட்பாடு என்றால் என்ன?** 14

மதிப்பீடு செய்வதற்கான ஆதாரங்கள் 17

1. திருச்சபையின் வாழ்க்கையில் கோட்பாடு எங்கே உள்ளது? 17
2. கோட்பாடு எங்கிருந்து வருகிறது? 18
3. கோட்பாடு எவ்வாறு ஒப்படைக்கப்படுகிறது? 20
4. சமீப காலங்களில் கோட்பாடு எவ்வாறு புதுப்பிக்கப்பட்டது? 21
5. கோட்பாடு குறித்த உரையாடலில் ஏன் ஈடுபட வேண்டும்? 22
6. திருச்சபைகள் ஒன்றுக்கொன்று கோட்பாட்டைக் கற்றுக்கொள்ள முடியுமா? 23
7. கோட்பாட்டை வெளிப்படுத்த புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் உள்ளதா? 24

II. **மதங்களின் கோட்பாடு என்ன?** 26

III. **திருச்சபை என்றால் என்ன?** 31

கணித்தலுக்கான ஆதாரங்கள் 34

1. எங்கே துவங்குவது? 34
2. திருச்சபையின் அழைப்பு என்ன? 35
3. எவ்வாறு சபை ஒன்றாக இருக்கிறது? 37
4. சபை எவ்வாறு பரிசுத்தமானது? 42

5. கேத்தலிக் சபை எப்படி இருக்கிறது? 44
6. சபை எவ்வாறு அப்போஸ்தல (திருத்தூதர்) பண்பிற்குரியதாக இருக்கிறது? 46
7. ஒழுங்குகளுக்கு சபை எந்த இடம் அளிக்கப்படுகிறது? 48
8. ஐக்கியம் என்றால் என்ன? 52
9. எவ்வாறு ஒருங்கிணைத்து சொல்லலாம்? 53

# அறிமுகம்

டி.எஸ்.எலியட், “தி ஃபோர் குவார்டெட்ஸ்,” என்னும் அவரது சிறந்த கவிதைத் தொகுப்பில், நாம் எவ்வாறு ஒரு அனுபவத்தைப் பெற முடியும், ஆனால் அர்த்தத்தை இழக்க முடியும் என்பதை விவரிக்கிறார். இது மற்றவர்களைப் போலவே இறையியல் மாணவர்களுக்கும் பொருந்தும்: அவர்கள் ஊழியம் மற்றும் திருச்சபை வாழ்க்கையின் நடைமுறைகளில் மிகவும் ஆர்வமாக இருப்பதினால் அவர்கள் அதன் உண்மையான அர்த்தத்தின் தொடர்பை இழக்கிறார்கள்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் கோட்பாடுகளைப் படிப்பதில் நேரத்தை செலவிடுவதும், நாம் செய்யும் எல்லாவற்றிற்கும் அடித்தளமாக இருக்கும் நம்பிக்கைகளும், பல மாற்றங்களை உண்டாக்கும். இந்த ஆய்வு வழிகாட்டி மாணவர்களுக்கு இதைச் செய்வதற்கான வாய்ப்பை, இலவசமாக இணையத்தில் கிடைக்கும் ஆங்கிலிகன் மற்றும் எக்குமெனிகல் நூல்களின் உதவியுடன் வழங்குகிறது. இறையியல் நூலகங்களுக்கு அணுகல் இல்லாத ஆங்கிலிகன் ஒன்றியம் முழுவதும் உள்ளவர்களுக்கு குறைந்தது அல்ல. மேலும், எலியட் தொடர்ந்து கூறுகையில், உண்மையான அர்த்தத்தை கண்டுபிடிப்பது “அனுபவத்தை வேறு வடிவத்தில் மீட்டெடுக்கிறது“

ஆங்கிலிகன் திருச்சபைகள் உருவாக்கப்பட்டதிலிருந்து அது உலகெங்கிலும் உள்ள மற்ற திருச்சபைகளுடனும் ஆங்கிலிகன் திருச்சபைகளுடனும் கொண்டிருந்த கோட்பாடு பற்றிய உரையாடலை இந்த ஆய்வு வழிகாட்டி விளக்குகிறது. சமீப காலங்களில், இந்த உரையாடல்கள் உயர்ந்த மற்றும் அதிகாரபூர்வமான ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளன. இது ஆங்கிலிகன் இறையியலாளர்களால் பிற திருச்சபை இறையியலாளர்களுடன் இணைந்து எழுதப்பட்ட தொகுப்பு. மேலும், இந்த திருச்சபைகளால் பெறப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ளபடி கிறிஸ்தவ விசுவாசத்தின் பரந்த மற்றும் மேம்பட்ட வரைபடத்தை காட்டுகின்றது.

இந்த ஆய்வு வழிகாட்டியில், பல்வேறு வலைத்தளங்களிலிரு-

ந்து இந்த அறிக்கைகள் கிடைப்பதை சாதகமாகப் பயன்படுத்தி, கிறிஸ்தவ கோட்பாட்டின் சுருக்கமான மற்றும் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட அறிமுகம் ஒன்றாக எடுக்கப்பட்டு, ஆங்கிலிகன் ஒன்றியத்தின் வீட்டு குழுக்கள், ஆய்வுத் திட்டங்கள், செமினரிகள் மற்றும் இறையியல் கல்லூரிகளில் பயன்படுத்தப்படுகிறது. இது ஆங்கிலிகன் ஒன்றியத்தில், இன்டர் ஆங்கிலிகன் ஸ்டாண்டிங் கமிஷனின் ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் ஒழுங்கு (IASCUFO) உறுப்பினர்களால், ஆங்கிலிகன் ஒன்றியத்தின் இறையியல் கல்வித் துறையுடன் (TEAC) இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இது அனைவராலும் பயன்படுத்தப்படவும் இலவசமாக கிடைக்கப்படவும் ஆங்கிலிகன் ஒன்றியத்தின் வலைத்தளத்தின் இறையியல் கல்வி பக்கங்களில் பதிவேற்ற இது தொகுக்கப்பட்டுள்ளது.

வாசகர்களுக்கு உதவுவதற்காக ஒவ்வொரு அத்தியாயத்திலும் கேள்விகள் மற்றும் பதில்கள் வழி இந்த ஆய்வு வழிகாட்டி ஒரு ஊடாடும் அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. இது பரந்த கேள்விகளுடன் தொடங்குகிறது, அதாவது, பொதுவாக கோட்பாடு என்றால் என்ன என்றும், மற்றும் அனைத்து வரலாற்று திருச்சபைகளுடனும் பகிர்ந்து கொள்ளும் கோட்பாடு என்ன என்றும் தொடங்கி, அங்கிருந்து குறிப்பிட்ட ஆங்கிலிகன் கோட்பாடு வரை சுருங்குகிறது. முதல் அத்தியாயம் கோட்பாட்டின் பொதுவான தன்மையைப் விவரித்து, சீடத்துவத்திற்கும் பணிக்கும் முழுமையாக அதன் இடத்தை அறிமுகப்படுத்துகிறது. இரண்டாவது அத்தியாயம் **நிசீன் க்ரீட்டின்** கோட்பாடுகளை கொண்டுள்ளது. இது கிழக்கு மற்றும் மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு ஆகிய திருச்சபைகளாலும் பகிரப்படுகிறது. இது சமீபத்திய மற்றும் பரவலாக வரவேற்கப்பட்ட எக்குமெனிகல் (Ecumenical) உரையைப் பயன்படுத்தி, அதன் பொருளைத் உணர்த்தி இன்றைக்கும் பொருந்துமாறு வெளிக்காட்டுகிறது. இந்த அத்தியாயம் அதனுடன் ஈடுபடுவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்கும். மூன்றாவது மற்றும் மிக நீளமான அத்தியாயம் திருச்சபையின் கோட்பாட்டை குறிக்கிறது. ஆங்கிலிகன் மற்றும் எக்குமெனிகல் எக்லெசியாலஜிக்கல் அறிக்கைகளின் ஒரு சிறந்த தேர்ந்தெடுப்பை வெளிப்படுத்தி இந்த தற்காலத்திய மற்றும் முக்கியமான விஷயத்தை பல கோணங்களிலிருந்து அணுகவும், சடங்குகளின் தன்மையைத் மேலோட்டமாக பார்க்கவும் இது உதவும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட அறிக்கைகள் எவ்வாறாயினும், தொலைதூர பார்வைக்கு அழைத்துச் செல்கிறது. வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் அவற்றைப் படிப்பது மட்டுமல்லாமல் புரிந்துகொள்வதும், விளக்குவதும் வெளிப்படுத்தப்படுவதும்

அவசியம். திடீரென்று எதையாவது புரிந்துகொள்ளும் தருணங்களும் கோட்பாடுகளின் பொருள் தெளிவாகவும், உற்சாகமாகவும் மாறும் தருணங்களும் இருக்க, அவற்றை நம் வாழ்வில் வெளிப்படுத்தி கொள்கிறோம்.

இவை அனைத்தும் அந்தந்த சூழலின் சமூக மற்றும் கலாச்சார யதார்த்தங்களைப் பொறுத்து ஒவ்வொரு இடங்களில் மிகவும் மாறுபட்டு இருக்கும். ஒவ்வொரு ஆய்வுக் குழுவும் இந்த காரியங்களைச் செய்வதற்கு தங்களுக்கு பொருத்தமான நிலையிலும், தங்களுக்குப் பொருத்தமான வகையிலும் ஒரு வழியைக் கண்டுபிடிக்கும். ஆய்வு செயல்முறையை வழிநடத்தும் நபர் இந்த இயக்கவியல் குறித்து உணர்திறனுடன் ஆய்வை வடிவமைக்க வேண்டும்.

இதற்கு உதவ, இந்த ஆய்வு வழிகாட்டி பெரும்பாலும் “பார்-மதிப்பிடு-செய்லபடு’ அல்லது “எடுத்துக்கொள்வது, ஆராய்வது, நடவடிக்கை எடுப்பது” என விவரிக்கப்படும் கற்றலுக்கான அணுகுமுறையை சொல்கிறது. இது ஒரு எளிய ஆனால் பயனுள்ள மூன்றுபடி முறை பிரதிபலிப்பு மற்றும் செயலாகும், இது மீண்டும் மீண்டும் செய்யப்பட கற்பவரின் சூழ்நிலையில் இருந்து கேள்விக்குரிய உரைக்கு நகர்ந்து, பின்னர் ஒரு நடைமுறை பதிலுக்கு, செல்கிறது:

**பார்**

இம்முதல் படி நம் சூழ்நிலையை குறித்து சொல்கிறது அதாவது நாம் நம்மை எந்த நிலையில் காண்கிறோம் என்பதாகும். இவ்வகையான ஆராய்ச்சி நம்மில் என்ன நடக்கின்றது, யார் ஈடுபட்டுள்ளார் அதன் விளைவுகள் என்ன? என பல கேள்விகளைத் தூண்டும் இதன் அடிப்படையில் கோட்பாடு என்பதனை கருத்தில் கொண்டு நம் திருச்சபைகளில் (உள்ளூர் அல்லது பிராந்தியமாக இருந்தாலும்) கோட்பாட்டின் (அல்லது குறிப்பிட்ட கோட்பாட்டின்) தற்போதைய பங்கு என்ன, யார் இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும், அதன் விளைவுகள் எவை என்றும் குறிக்கும். இந்த கற்பித்தல் செயல்முறையின் முதல் படிக்கு சமூக பகுப்பாய்வு தேவைப்படுகிறது, இது சிறப்பாக ஒரு குழுப்பயிற்சியாக யதார்த்தத்தைப் பகிர்ந்து அதை ஒன்றாக பகுப்பாய்வை ஈடுபாடுடன் செய்யப்படுவதாகும்.

**மதிப்பீடு**

இரண்டாவது படி இத்தலைப்பை பற்றிய ஒரு விமர்சன

முன்னோக்கை பெறுவதாகும். இதை நாம் வேதங்கள் மூலமாகவும், திருச்சபைகளில் கற்பித்தல் மூலமாகவும், நமது சூழலில் தற்போது என்ன இருக்கிறது என்பதை ஒப்பிட்டு பார்ப்பதின் மூலமாகவும் பெற இயலும். கோட்பாட்டை பொறுத்த வரையிலும் இச் செயல்முறை அதிகாரப்பூர்வ எக்குமெனில் மற்றும் ஆங்கிலிகன் அறிக்கைகளிலிரு-ந்து திருச்சபையின் வாழ்க்கையில் கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட கோட்பாடுகளின் பொருள் மற்றும் அது வகுக்கும் இடத்தை படிப்பதும் கற்றுக்கொள்வதும் அடங்கும். இதனை தொடர்ந்து முதல் படியை உபயோகித்து சூழலை ஆராய்ந்து நிலைமை எவ்வாறு சாதகமாக விமர்சிக்கப்படுகிறது என்பதை சிந்திக்க தூண்டுகிறது. கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட கோட்பாடுகளைப் புரிந்துகொள்வதில் என்னென்ன மாற்றங்கள் மற்றும் வளர்ச்சி ஏற்படலாம், என்னென்ன செய்யப்பட வேண்டும் என்றும் அவை எவ்வாறு தம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்னும் உண்மையான மற்றும் எழுச்சியூட்டும் வெளிப்பாட்டை கொண்டுவரும் என்பனவும் இந்த ஆய்வு வழிகாட்டியின் உள்ளடக்கங்கள் ஆகும். இவ்வுள்ளடக்கங்கள் இந்த இரண்டாவது கட்டத்தை வளப்படுத்துகிறது

### செயல்படு

இரண்டாவது கட்டத்தில் பெற்ற திருச்சபை வாழ்க்கை குறித்த விமர்சன முன்னோக்குக்கு பதிலளிக்கும் வகையில், மூன்றாவது படி என்னவென்றால், நடைமுறையில் என்ன நடக்கிறது, என்ன நடக்க வேண்டும் என்பதற்கான இடைவெளியை எவ்வாறு குறைக்கப் போகிறோம் என்பதை தீர்மானிப்பதாகும். இதன் அடிப்படையில், பொதுவாக கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட கோட்பாடுகள், எவ்வாறு, நமது வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் சூழ்நிலை சார்ந்த உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது. பின்னர் அந்த மாற்றங்களை உருவாக்கவும் தீர்மானிக்கப்படுகிறது. இந்த மாற்றங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கும், நாம் செய்யும் கடமைகளுக்கு ஒருவருக்கொருவர் தாங்கிக்கொள்வதற்கும் இது ஒரு குழு பயிற்சியாக சிறப்பாக செய்யப்படுகிறது.

இந்த ஆய்வு வழிகாட்டி இந்த மூன்று-படி முறை மூலம் கோட்பாட்டின் ஒவ்வொரு பகுதியையும் அணுகும். இதற்குள், குறிப்பிட்டுள்ளபடி, இது ஒரு கேள்வி பதில் வடிவ விளக்கக்கா-ட்சியைப் பயன்படுத்துகிறது, ஒவ்வொரு பகுதியிலும் வாசகருக்கும் தொடர்புடைய அறிக்கைகளுக்கும் இடையிலான உரையாடலாக செல்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் வாசகர் வாசிப்பு மற்றும்

புரிதலில் இருந்து விளக்கம் மற்றும் நடைமுறை வெளிப்பாட்டிற்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இந்த அணுகுமுறையில், ஒரு விளைவு மட்டும் தொகுக்கப்படாது. ஏனென்றால் ஒவ்வொரு குழுவும் தங்கள் சொந்த சூழலில், தாங்கள் பெற்ற கோட்பாட்டை பின்பற்றுவதற்கான தங்கள் சொந்த வழியைக் கண்டுப்பிடிப்பர்.

கட்டங்களில் உள்ள அனைத்து குறிப்புகளும் எக்குமெனிகல் நூல்களின் மேற்கோள்கள். நூல் விவரங்கள் கொண்ட நூற்பட்டியல் ஆய்வு வழிகாட்டியின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலதிக ஆய்வுக்கு நூல்களின் சில பரிந்துரைகளும் உள்ளன.

❍

இந்த ஆய்வு வழிகாட்டி ஒரு வரைவு தான். இது காலப்போக்கில் திருத்தப்பட்டு விரிவாக்கப்படும். அந்த திருத்தப்பட்டு எழுதும் பதிப்பிற்கான கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெற்றால் நான் மகிழ்ச்சியடைவேன்.

**ஸ்டீபன் ஸ்பென்சர்** (Stephen Spencer)
ஆங்கிலிகன் கம்யூனியன் அலுவலகத்தில் இறையியல் கல்விக்கானஇயக்குநர்
stephen.spencer@anglicancommunion.org

# 1
# கோட்பாடு என்றால் என்ன?

**பார்த்தல்**

கோட்பாட்டைப் படிப்பதற்கான ஒரு ஈர்க்கும் வழியை, திருச்சபையின் வாழ்க்கையில், கோட்பாட்டின் இடத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம் தொடங்க வேண்டும் - அதாவது, நமது 'சூழல்'. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, அத்தகைய பகுப்பாய்வு 'என்ன நடக்கிறது, யார் அதில் ஈடுபட்டுள்ளனர், அதன் விளைவுகள் என்ன' என்று கேட்கும். இந்த விஷயம் காலங்காலமாக கிறிஸ்தவ சமூகத்தின் முக்கிய நம்பிக்கைகளாக இருப்பதால், கேள்விகள் நம் திருச்சபையின் வாழ்க்கையில் இந்த கோட்பாட்டின் பங்கு, அந்த பாத்திரத்தில் ஈடுபட்டுள்ளவர், அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்பது பற்றியதாக இருக்கும்.

இந்த கேள்விகளை முழு அளவிலான வழிகளில் கையாளலாம். எடுத்துக்காட்டாக, புதிய உறுப்பினர்கள் திருச்சபையில் எவ்வாறு அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும், அவர்கள் ஒரு கோட்பாட்டு அறிக்கையை ஒப்புக்கொள்கிறார்களா அல்லது தெளிவான கோட்பாட்டு கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்கிறார்களா என்றும் நாம் பார்க்கலாம். ஒட்டுமொத்த சமூகத்தினரிடையே கோட்பாட்டின் புரிதலும் உரிமையும் எவ்வளவு உள்ளது? திருச்சபையின் வழிபாட்டிலும், அதன் மக்களின் சீடத்துவத்திலும் மதங்களின் இடம் என்ன? பிரசங்கத்திலிருந்து எவ்வளவு கோட்பாட்டு கற்பித்தல் நடைபெறுகிறது? சிறிய ஆய்வுக் குழுக்களில் எவ்வளவு கோட்பாட்டு கற்பித்தல் நடைபெறுகிறது? இவற்றின் மீது எவ்வளவு பிரதிபலிப்பு மற்றும் வரவேற்பு உள்ளது? சமூகக்கூடுகைகளின் அமைப்பு எவ்வாறு உள்ளது? தேவாலய கட்டிடத்தின் கட்டடக்கலை தளவமைப்பு மற்றும் அலங்காரம் போன்றவை அல்லது சமூகத்தின் வழிபாட்டு மற்றும் சமூக வாழ்க்கை, அல்லது பரந்து விரிந்த சமூகத்தில் அது உண்டாக்கும் அணுகுமுறை எவ்வாறு உள்ளது? இது திருச்சபைகளின் நம்பிக்கைகளை மறைமுகமாக அல்லது வெளிப்படையாக உள்ளடக்குகிறதா? மக்கள் அதைப் பார்க்கிறார்களா? மக்கள் அதை சொந்தமாக வைத்திருக்கிறார்களா?

விசுவாசத்தின் கோட்பாடுகள் கடவுளின் மக்களை கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வழிகாட்டி ஊக்கமளிக்கின்றனவா அல்லது இந்த கோட்பாடு அவர்களின் பொதுவான வாழ்க்கைக்கு ஓரளவா உள்ளதா? போன்றவை ஆகும்.

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க ஒரு பெரிய ஆராய்ச்சி திட்டம் தேவையில்லை. ஏற்கனவே ஒரு உள்ளூர் தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த அறிவு, புரிதல் மற்றும் பதிவுகள் ஆகியவற்றை ஒன்றாகக் கொண்டு அந்த நிலைமையை நினைத்து ஒரு சித்திரம் வரைவதற்கு முடியும். ஒப்புக்கொண்டபடி, இது ஒரு கண்ணோட்டத்தில் இருக்கும், ஆனாலும், இதற்கு எல்லாவற்றிற்கு மேலே அதிகாரம் இருக்கும். இந்த முதல் கட்டத்தின் நோக்கம் இறுதி பதில்களை வழங்குவதல்ல, ஆனால் சில பொருத்தமான கேள்விகளைக கேட்கத் தொடங்கவும், பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், திருச்சபை சமூகத்தின் வாழ்ந்த யதார்த்தத்திற்குள் இது எல்லாம் இருக்க முடியாது என்பதைக் காணவும் ஆகும்.

## மதிப்பிடுதல்

இரண்டாவது படி, குறிப்பிட்டுள்ளபடி, இந்த விஷயத்தில் ஒரு விமர்சன முன்னோக்கைப் பெறுவது பற்றியது, இதை நாம் வேதங்கள் மூலமாகவும் திருச்சபைகளில் கற்பித்தல் மூலமாகவும் நமது சூழலில் தற்போது என்ன இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமாகவும் பெற இயலும் கோட்பாட்டை பொறுத்தவரையிலும் செயல்முறை அதிகாரப்பூர்வ எக்குமெனிகல் மற்றும் ஆங்கிலிகன் அறிக்கைகளிலிருந்து திருசபையின் வாழ்க்கையில் கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட கோட்பாடுகளின் பொருள் மற்றும் அது வகிக்கும் இடத்தை படிப்பதும் கற்றுக்கொள்வதும் அடங்கும். புரிதல் மற்றும் வெளிப்பாட்டில் என்ன மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை அவர்கள் செய்ய முடியும்? இந்த அத்தியாயத்தின் மீதமுள்ளவை இதற்கு உதவ முன்னோக்குகள் மற்றும் கேள்விகளின் தொகுப்பை வழங்குகிறது. கீழேயுள்ள முன்னணி கேள்விகள் அறிக்கைகளின் பதில்களின் தொகுப்பிற்கான வழியைத் திறக்கின்றன. பின்னர் சவால் இதுவாகிறது: இப்பதில்கள் எங்கள் திருசபை சமூகத்தின் வாழ்ந்த யதார்த்தத்தை எந்த வழிகளில் சவால் செய்கின்றன? ஏற்கனவே இருப்பதை அவர்கள் எந்த வழிகளில் உறுதிப்படுத்துகிறார்கள்? அவர்கள் என்ன மாற்றங்களையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கக்கூடும்? ஒவ்வொரு பகுதியும் வாசகர்களுடன் ஈடுபட இட்டாலிக்ஸில் ஒரு விவாத கேள்வியுடன் முடிவடைகிறது.

## செயல்படுதல்

இரண்டாவது கட்டத்தில் பெற்ற திருச்சபை வாழ்க்கை குறித்த விமர்சன முன்னோக்குக்கு பதிலளிக்கும் வகையில், மூன்றாவது படி என்னவென்றால், நடைமுறையில் என்ன நடக்கிறது, என்ன நடக்க வேண்டும் என்பதற்கான இடைவெளியை எவ்வாறு குறைக்கப் போகிறோம் என்பதை தீர்மானிப்பதாகும். இதன் அடிப்படையில், பொதுவாக கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட கோட்பாடுகள், எவ்வாறு நமது வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் சூழ்நிலை சார்ந்த உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது. பின்னர் அந்த மாற்றங்களை உருவாக்கவும் தீர்மானிக்கப்படுகிறது. இந்த மாற்றங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கும், நாம் செய்யும் கடமைகளுக்கு ஒருவருக்கொருவர் தாங்கிக்கொள்வதற்கும் இது ஒரு குழு பயிற்சியாக சிறப்பாக செய்யப்படுகிறது.

சிரமம் என்னவென்றால், இரண்டாவது படி சாத்தியமான செயல்களின் முழு அளவை, தனிப்பட்ட மற்றும் கார்ப்பரேட் மட்டத்தில்லும், சில நேரடியான மற்றும் சிலது மிகவும் லட்சியமானவற்றிலும் வெளிப்படுத்தியிருக்கும். இவை அனைத்தும் அதிகமாய் இருக்கிறபடியினால் ஒரே நேரத்தில் முயற்சிக்க கடினமாயிருக்கும், அதனால், முன்னுரிமை அளிப்பது குறித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். எப்போதும் போல, பல விஷயங்களை மோசமாக செய்வதைக் காட்டிலும் சில விஷயங்களைச் சிறப்பாகச் செய்வது நல்லது. முன்னுரிமை அளிப்பதற்கான ஒரு வழி என்னவென்றால், எந்த மாற்றங்கள் கிறிஸ்தவ சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கேட்பதும், பின்னர் இதை இயற்றுவதுமாகும். வேறுவிதமாகக் கூறினால், எந்த மாற்றமானது கோட்பாட்டை அதன் வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் மிகவும் சூழல் ரீதியான உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் பாத்திரத்தை வகிக்க உதவும்? இந்த மூன்றாவது படி எல்லாவற்றிலும் மிக முக்கியமானது. ஏனென்றால், திருச்சபை வாழ்விலும் மற்றும் உலகின் தற்போதைய வாழ்க்கையிலும் இது ஒரு முக்கியமான வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

# மதிப்பீடு செய்வதற்கான ஆதாரங்கள்

**1. திருச்சபையின் வாழ்க்கையில் கோட்பாடு எங்கே உள்ளது?**

ஒரு கிறிஸ்தவராக இருக்க, இயேசு கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும். சமூகத்தில் இயேசு வாழ்ந்த வழியைக் கற்றுக்கொள்வதற்கும் வாழ்வதற்கும் இது தடையின்றித் தொடர்ந்து செல்கிற பயணமாகும். தனிப்பட்ட, வகுப்புவாத மற்றும் கலாச்சார மாற்றத்திற்கான இந்த நம்பிக்கையை மற்றவர்களுடன் பரிசுத்த ஆவியின் சக்தி மூலம் பகிர்ந்து கொள்ள முடியும். உலகெங்கிலும் உள்ள ஆங்கிலிகர்கள் தற்போது இதன் நம்பகத்தன்மையையும் ஆற்றலையும் மீண்டுமாக கண்டுபிடித்திருக்கிறார்கள் (rediscover) இதை சீடத்துவத்தின் நிலை என்று அழைக்கின்றனர்.

நோக்கமுள்ள சீடத்துவம் மற்றும் சீடர் உருவாக்குதல்,

நோக்கமுள்ள சீடத்துவத்தின் நிலை என்பது சமூகத்தில் இயேசுவின் சீடர்கள் அனைவருடன் ஸ்ரீமக்கள் நேசிக்கப்படுகிறார்கள் என்ற அர்த்தத்தில் வளர்வதும், மனிதனாய் வந்த இயேசு கிறிஸ்துவின் பேரில் கடவுளை நேசிப்பதினால், இயேசுவை இன்னும் ஆழமாக அறிந்து கடவுளுக்கும் கடவுளின் உலகத்திற்காக தங்களை வழங்குவதன் மூலம் பதிலளிப்பதினாலும், இந்த உறவைச் சுற்றி அவர்களின் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்துகிறதினாலும் அமைவது ஆகும்

'சீடத்துவம்' என்பது ஆங்கிலிகனிசத்தின் சாராம்சம். செல்டிக் மற்றும் அகஸ்டினிய ஆன்மீகத்தின் வேர்களிலிருந்து, ஐரோப்பிய சீர்திருத்தத்தால் வடிவமைக்கப்பட்ட ஆங்கிலிகனிசம் எப்போதுமே அனுபவம் உள்ள (முற்றிலும் அறிவார்ந்த அல்லது ஆன்மீகமயமாக்கப்பட்டது அல்ல) விசுவாசமாக இருக்கிறது. இது இயேசுவின் வழிகளைப் பின்பற்றி வாழ்வது பற்றியது... சீடத்துவம் என்பது ஆங்கிலிகன் ஒன்றியத்தின் கத்தோலிக்க-புராட்டஸ்டன்ட் தன்மையை பிரதிபலிக்கிறது. கத்தோலிக்க திருச்சபையின் இயல்பின் உண்மையான அர்த்தத்தை நாம் கண்டுபிடித்துள்ளோம், இது எவ்வாறெனில், எல்லா மக்களையும், எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் ஒரு இரட்சகரை நாம் பின்பற்றுகிறதினால் மட்டும் தான். புராட்டஸ்டன்டிசத்தின் உண்மையான நோக்கத்தை நாம் கண்டு கண்டறிந்துள்ளோம், ஏனென்றால் நம் சீஷத்துவம் பரிசுத்தமில்லாத எல்லாவற்றையும் தீர்க்கதரிசன ஈடுபாட்டிற்கு அழைத்துச் செல்கிறதினால் மட்டும் தான்.

ஆகவே, இந்த சீஷத்துவ வாழ்க்கை, கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தின் புரிதலிலும் உரிமையிலும் வளர அழைத்து, மற்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வழிகளில் அதைத் தெரியப்படுத்தும். இங்குதான், கோட்பாட்டு இறையியல் (doctrinal theology) செயல்பாட்டுக்கு வருவது (கிரேக்க சொற்களான தியோஸ் (theos)- பொருள்: கடவுள்; மற்றும் லோகோஸ் (logos)- பொருள்:சொற்கள், கொண்டு theology என்னும் பதம் உருவானது. அதாவது, கடவுளைப் பற்றிய வார்த்தைகள்).

கிறிஸ்தவர்கள் யுகங்களாக, வேதத்தின் வெளிச்சத்தில், தங்கள் விசுவாசத்தைப் பற்றி எவ்வாறு பேசுவது என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இதை, மக்கள் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கு உபயோகிக்கும் மொழியைக் கண்டறிவதின் மூலம், நாம் தெரிந்துகொள்ளலாம். புதிய சிந்தனையில், கடவுளின் தன்மை, கடவுளின் படைப்பு மற்றும் மீட்பின் செயல்களைப் பற்றி கடவுளின் மக்கள் மற்றவர்களுக்கு பேசும்போதெல்லாம், இறையியல் மற்றும் கோட்பாட்டளவை பிரதிபலிக்கிறார்கள் என்று கூறலாம். இது மிக நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது:

> ஒப்புதல் பிரகடனத்திற்கான முன்னுரை, இங்கிலாந்து தேவாலயத்தின் கேனான் சி 15:
>
> ...திருச்சபை ஒவ்வொரு தலைமுறையிலும் புதிதாக ஜஅதன் நம்பிக்கையைஸ அறிவிக்க அழைக்கப்படுகிறது.

**?** உங்கள் திருச்சபை எந்த அளவிற்கு கிறிஸ்தவ நம்பிக்கையை 'புதிதாக அறிவிக்கிறது'? இதை எவ்வாறு சிறப்பாகச் செய்ய முடியும்?

## 2. கோட்பாடு எங்கிருந்து வருகிறது?

ஆரம்ப காலத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் ஒன்றாக இறையியலைப் படித்து வருகின்றனர். செயிண்ட் பவுலின் வார்த்தைகள் சாட்சியமளிப்பதைப் போல, அவர்கள் இதில் ஒன்றாக நிற்கிறார்கள்: உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். இன்னும் நாம், அப்போஸ்தலருடைய நடபடிகள அப்போஸ்தலர்களின் படிக்கும்போது, கிறிஸ்தவர்கள் தனித்துவமான சமூகங்களை

எவ்வாறு உருவாக்கியுள்ளனர் என்றும், சில நேரங்களில் அவை கோட்பாடு அல்லது கலாச்சாரத்தின் மீது எவ்வாறு பிளவுபட்டுள்ளன என்றும், அத்துடன் புவியியல் மூலமும் எவ்வாறு பிரிக்கப்படுகிறது என்றும் படிக்கின்றோம். எனவே அதிகப்படியான பன்முகத்தன்மை உள்ளதா, அது ஆரோக்கியமானதா அல்லது ஆரோக்கியமற்றதா என்பதில் எப்போதும் பதற்றம் நிலவுகிறது.

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் 'எக்குமெனிகல் மன்றங்கள்' உரையாற்றிய கேள்விகளில் இறையியல் புரிதல்களில் வேறுபாடுகள் இருந்தன. திருச்சபைகளின் ஆயர்களை மற்றும் இறையியலாளர்களை ஒன்றிணைத்த கூட்டங்கள் இவை. மன்றங்கள்' 'எக்குமெனிகல்' என்று அழைக்கப்பட்டன, அதாவது 'பொது' அல்லது 'உலகளாவிய,' லத்தீன் வார்த்தையில் ஓய்கமெனிகோஸ் (oikoumenikos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'முழு உலகத்திலிருந்தும்' என்பதாகும். முதல் நான்கு மன்றங்களின் முடிவுகள் என்னவெனில் - 'கத்தோலிக்க மன்றங்கள்' [நிசேயா கவுன்சில்கள் (325), கான்ஸ்டான்டினோபிள் (381), எபேசஸ் (431) மற்றும் சால்செடன் (451)] - கிறிஸ்துவின் முழு மனித மற்றும் தெய்வீக இயல்பு, திரித்துவம் மற்றும் நிசேயா விசுவாச பிரமாணம் போன்ற முக்கியமான விஷயங்களை உள்ளடக்கியது. இவை பெரும்பாலான வரலாற்று திருச்சபைகளால் அதிகாரப்பூர்வ கோட்பாடுகளாக கருதப்படுகின்றன.

**ஆங்கிலிகன் உடன்படிக்கை**

<u>பிரிவு ஒன்று: எங்கள் விசுவாசத்தின் மரபு</u>

1.1. ஒவ்வொரு ஜஆங்கிலிகன்ஸ திருச்சபையும் எதை உறுதிப்படுத்துகிறது என்னவென்றால்:

(1.1.1) புனித, கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தலிக்க திருச்சபையில் அதன் ஒற்றுமை, ஒரே உண்மையான கடவுள், தந்தை, மகன் மற்றும் பரிசுத்த ஆவியானவரை வணங்குகிறது.

(1.1.2) கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தலிக்க விசுவாசம் பரிசுத்த வேதாகமத்தில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டு கத்தோலிக்க விசுவாச பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஒவ்வொரு தலைமுறைக்கும் திருச்சபை இந்த விசுவாசத்தை புதிதாக அறிவிக்க அழைக்கப்படுகிறது.

? உங்கள் திருச்சபை, விசுவாச பிரமாணத்தை கற்றுக்கொள்ளவும் அதில் கவனம் செலுத்தவும் எந்த அளவிற்கு ஈடுபாடுகாட்டுகிறது? அவற்றிலிருந்து நீங்கள் எவ்வாறு ஆழமாக கற்றுக்கொள்ள முடியும்?

## 3. கோட்பாடு எவ்வாறு ஒப்படைக்கப்படுகிறது?

அப்போஸ்தலிக்க திருச்சபையிலிருந்து ஒரு ஆற்றல் வாய்ந்த விதத்தில் கோட்பாடு வழங்கப்படுகிறது:

> ஒற்றுமை மற்றும் பணிக்கான சர்வதேச ஆங்கிலிகன்–ரோமன் கத்தோலிக்க ஆணையம், ஒற்றுமை மற்றும் பணியில் ஒன்றாக வளர்வது: ஆங்கிலிகன்–ரோமன் கத்தோலிக்க உரையாடலின் 40 ஆண்டுகளை உருவாக்குதல்: ஒப்புக்கொண்ட அறிக்கை (2006)
>
> ஆங்கிலிகன் மற்றும் ரோமன் கத்தோலிக்கர்கள் "வழிபாட்டு முறை, இறையியல், ஆன்மீகம், திருச்சபை ஒழுங்கு மற்றும் பணி ஆகியவற்றின் வாழ்க்கை மரபுகளுடன்" பல நூற்றாண்டுகளாக பகிரப்பட்ட ஒரு பொதுவான கிறிஸ்தவ பரம்பரையை ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். நாங்கள், திருச்சபை பாரம்பரியத்தின் ஒரு மாறும் செயல்பாட்டில் வாழ்கிறது என்பதையும், ஒவ்வொரு தலைமுறையினருக்கும் ஒரு முறை சொன்னதை அனைத்து அப்போஸ்தலிக்க சமூகத்திற்கு மறுபடியும் தெரிவுபடுத்தவும், மற்றும் திருச்சபை யானது ஊழியக்காரர், அது எஜமானர் அல்ல என்பதையும் ஒப்புக்கொள்கிறோம்.

இருப்பினும், கோட்பாடுகள் திருச்சபை அதிகாரிகளால் வெறுமனே ஒப்படைக்கப்படவில்லை. ஒரு உரையாடலை வழங்குவதற்கும் பெறுவதற்கும் இரண்டு வழி செயல்முறை உள்ளது. அதில் அதிகாரப்பூர்வ கற்பித்தல் வருகிறது:

> ஆங்கிலிகன்–ஆர்த்தடாக்ஸ் இறையியல் உரையாடல் திரித்துவக் கடவுளின் தேவாலயம், பிரிவு IX
>
> வரவேற்பு என்பது திருச்சபையின் தற்போதைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். கிறிஸ்துவின் மற்றும் அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே, இறைவனின் செய்தியை திருச்சபை மீண்டும் மீண்டும் பெற்று வருகின்றது. மனிதநேயத்தைப் பெறுவதில், இயேசு கிறிஸ்துவே, பிதாவிடமிருந்து அவருடைய பணியைப் பெற்றார். அவர் மனிதனாக சேர்ந்து இஸ்ரவேல் மக்களின் வரலாற்றையும் வேதத்தையும் பெற்றார். ஒரு குறிப்பிட்ட தலைமுறையைச் சேர்ந்து, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், அவர் தனக்கு அனுப்பப்பட்ட பாரம்பரியத்திற்குள் செயல்பட்டு பேசினார். வேதவசனங்களில், ஒரு பகுதியிலுள்ள கதைகள், படங்கள் மற்றும் சிந்தனைகள் மற்ற பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு மறுவேலை செய்யப்படுகின்றன. வரவேற்பு செயல்முறை திருச்சபைக்கு முந்தியுள்ளது, இதனை வரவேற்பின் விளைபொருளாகக் காணலாம்.

**?** உங்கள் உள்ளூர் திருச்சபையில் கோட்பாடு எவ்வாறு பெறப்பட்டு மறுவேலை செய்யப்படுகிறது? இது மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் மற்றவர்களை உள்ளடக்கிய வகையில் எவ்வாறு நிகழும்?

## 4. சமீப காலங்களில் கோட்பாடு எவ்வாறு புதுப்பிக்கப்பட்டது?

நவீன எக்குமெனிகல் இயக்கம் திருச்சபைகள் ஒன்று சேர்ந்து கோட்பாட்டை ஆராயும் செயல்முறையை மீண்டும் புதுப்பித்துள்ளது. இது குறிப்பாக நம்பிக்கை மற்றும் ஒழுங்கு இயக்கத்தின் மூலம் நிகழ்ந்துள்ளது. இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிஷனரி இயக்கத்திலிருந்து, திருச்சபைகள் ஒன்றோடொன்று புரிந்துகொள்வதற்கும் இணைந்து பணி செய்வதற்கும் எழுந்தது.

திருச்சபைகளின் உலக மன்றம், "நம்பிக்கை மற்றும் ஒழுங்கு என்றால் என்ன?":

கிறிஸ்தவ பிரிவினையைத் தடுக்கும் ஆசை கிறிஸ்தவ பிரிவினைப் போலவே பழமையானது. இது புதிய ஏற்பாடு சாட்சியமளிக்கும் வகையில், கிறிஸ்தவம் தோன்றிய காலத்திலே உள்ளது. ஆயினும் கடந்த நூற்றாண்டின் நவீன எக்குமெனிகல் இயக்கத்தில் குணப்படுத்துவதற்கான முயற்சிகள் இரண்டு பூரண வடிவங்களை எடுத்துள்ளன. இது "ஒன்றாக விவாதிப்பது" மற்றும் "ஒன்றாகச் செய்வது" என வகைப்படுத்தப்படலாம். எந்த மனித பிரிவிலும், ஒரு குடும்பம் அல்லது நட்பு ஒரு நிறுவனத்தின் மட்டத்தில் இருந்தாலும், மீண்டும் இணைவது என்பது விவாதத்தின் கலவையாக இருக்க வேண்டும். பிரிவைக் கொண்டுவர என்ன நடந்தது, உண்மையில் நம்மைப் பிரிப்பது என்ன, நம்மை இணைக்க என்ன செய்ய முடியும், அல்லது என்ன செய்கிறோம் – ஏற்கனவே ஒருவிதத்தில் ஒன்றாகச் செயல்பட ஆரம்பித்து, ஒருவிதமான பொதுவான வாழ்க்கையை கட்டியெழுப்ப அல்லது மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்குகிறது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த இயக்கங்களாகிய, நவீன எக்குமெனிகல் இயக்கத்தை உருவாக்கிய இயக்கங்கள் இந்த வடிவங்களை பிரதிபலித்தன. இந்த செயல்பாடு, வாழ்க்கை மற்றும் பணி இயக்கத்தால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது, அதே நேரத்தில் இது விவாதம், நம்பிக்கை மற்றும் ஒழுங்கு இயக்கத்தின் பணியாகும். இந்த இரண்டு செயல்பாடுகளும் அவற்றின் அக்கறைகளும் எப்போதுமே நிறைவு உண்டாக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும். கிறிஸ்தவர்கள் என்ன செய்கிறார்கள், என்பதை பற்றியது தான் விவாதம். செயல்பாட்டில் பெரும் கூட்டுறவு விவாதம் அடங்கும்! இன்று, கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒத்துழைப்புடன் செயல்படும் செயல்பாட்டு பகுதிகளில் உலக திருச்சபைகளின் மன்றத்தில் வாழ்க்கை மற்றும் பணி இயக்கம் குறிப்பிடப்படுகிறது: எ.கா., கல்வி, மனிதாபிமான பதில், அநீதி, மக்கள் மற்றும் சுற்றுச்சூழலை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிரான திட்டங்களில், உலக திருச்சபை மன்றத்தில் நம்பிக்கை மற்றும் ஒழுங்கு இயக்கம் முக்கியமானது. நம்பிக்கை மற்றும் ஒழுங்கு இயக்கத்தின் நோக்கம் இன்றும் எப்போதும், "இயேசு கிறிஸ்துவின் திருச்சபையின் ஒற்றுமையை அறிவிக்கவும், காணக்கூடிய ஒற்றுமையின் குறிக்கோளுக்கு திருச்சபைகளை அழைக்கவும்" ஆகும். இந்த இலக்கை அடைவதற்கான முக்கிய வழிமுறை என்னவெனில, திருச்சபைகளை பிளவுபடுத்தும் இறையியல் கேள்விகளைக் கையாளும் ஆய்வுத் திட்டங்களை கொண்டு வருவதாகும்.

இரு திருச்சபைகளுடனும் (ஆங்கிலிகன் ரோமன் கத்தோலிக்க சர்வதேச ஆலோசனைகள்- ARCIC போன்றவை) மற்றும் பலதரப்பு ரீதியாக (உலக திருச்சபை மன்றத்தில் நம்பிக்கை மற்றும்

ஒழுங்கு இயக்கத்திற்குள் போன்றவை) மற்ற திருச்சபைகளுடனான முறையான உரையாடலில் விசுவாசத்தின் அம்சங்களை திருச்சபைகள் விரிவாக ஆராய்ந்தன.

? கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி உங்கள் திருச்சபை பிற திருச்சபைகளிடம் எவ்வழியில் தெரிவித்துள்ளது? எதிர்காலத்தில் இது எவ்வாறு புதிய வழிகளில் நடைபெறும்?

## 5. கோட்பாடு குறித்த உரையாடலில் ஏன் ஈடுபட வேண்டும்?

பெரும்பாலும் மற்றவர்களுடன் பேசுவதன் மூலமே திருச்சபைகள் தாங்கள் நம்புவதை கூர்மைப்படுத்தவும் தெளிவுபடுத்தவும் தூண்டப்படுகின்றன. கடவுள் நம்மை அழைக்கும் வாழ்க்கையில் கற்றல் மற்றும் வளர்ந்து வருவதை ஒன்றாக வெளிப்படுத்துவது எப்படி என்பதை இது காண்பிக்கிறது.

உலக திருச்சபை மன்றத்தின், "சத்தியத்தின் வரிசைமுறை" – ஒரு எக்குமெனிகல் விளக்கம், ரோமன் கத்தோலிக்க–டபிள்யூ.சி.சி கூட்டு பணிக்குழுவின் அறிக்கை (1990):

36. மற்ற கிறிஸ்தவர்கள் விசுவாசத்தை வைத்திருக்கும், வெளிப்படுத்தும் மற்றும் வாழும் வழிகளை நன்கு புரிந்துகொள்வதன் மூலம், ஒவ்வொரு ஒப்புதல் வாக்குமூலமும் பெரும்பாலும் தன்னைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள வழிவகுக்கிறது. மற்றும் கோட்பாட்டின் அதன் சொந்த முன்னேற்றங்களை ஒரு பரந்த பார்வையில் காண ஆரம்பிக்கலாம். ஒருவருக்கொருவர் உள்ள இந்த அனுபவமும் விவேகமும் பரஸ்பரம் வளப்படுத்துகின்றன. எந்தவொரு அல்லது அனைத்து முன்னேற்றங்களாலும் இரகசியத்தை "குறைக்கும்" நோக்கத்துடன், இந்த செயல்முறை இரட்சிப்பின் பரம இரகசியத்தையும் அதன் பல்வேறு முன்னேற்றங்களையும் மரியாதையுடன் அணுகும். இந்த செயல்முறை வெளிப்பாட்டின் உண்மை, அவற்றின் தொடர்பு, அவற்றின் தேவை மற்றும் முன்னேற்றங்களின் சாத்தியமான பன்முகத்தன்மையின் வெளிப்பாடுகள் இன்னும் போதுமான அளவில் மதிப்பிடுவதற்கான ஒரு வழியாகும்...

பிற நன்மைகள் ஆங்கிலிகன்- பாப்டிஸ்ட் 'சர்வதேச உரையாடல்கள்' மூலம் அடையாளம் காணப்பட்டன:

ஆங்கிலிகன் ஒன்றியத்தின் மற்றும் பாப்டிஸ்ட் வேர்ல்ட் அலையன்ஸ், உலகம் முழுவதும் உரையாடல்கள் 2000–2005 (2005), அறிமுகத்திலிருந்து:

1. ஆங்கிலிகன் மற்றும் பாப்டிஸ்ட் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்வதற்கும், அவர்களின் இரு வரலாற்றிற்கும் இடையிலான உறவுகளை அவர்களின் வரலாற்றின் வெளிச்சத்தில் ஆழமாக்குவதற்கு.

2. கிறிஸ்தவ விசுவாசத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது மற்றும் அப்போஸ்தலிக்க விசுவாசத்தின் பொதுவான

ஒப்புதல் வாக்குமூலத்தை நோக்கி செயல்படுவதற்கு.

3. எதிர்கால உரையாடல்களில் கோட்பாடு மற்றும் தேவாலயத்தின் தன்மை ஆகியவற்றை மேலும் ஆராய்வதற்கு.

4. பணி மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதற்கான வழிகளைத் தேடுவது, நற்செய்திக்கு எங்கள் கூட்டுறவு மற்றும் பொதுவான சாட்சியை அதிகரிப்பதற்கு.

? நீங்கள் உங்கள் விசுவாசத்தை குறித்து பிற திருச்சபைகள் மற்றும் பிற மரபுகளைச் சேர்ந்தவர்களுடன் பேசுவதன் மூலம் எப்போதாவது அதை மிகச்சிறப்பாக புரிந்துகொண்டீர்களா? எதிர்காலத்தில் இதைச் செய்ய புதிய வழிகள் உள்ளனவா?

## 6. திருச்சபைகள் ஒன்றுக்கொன்று கோட்பாட்டைக் கற்றுக்கொள்ள முடியுமா?

திருச்சபைகளின் பொதுவான மொழி மற்றும் முன்னோக்குகளைப் பகிர்ந்து கொள்ளும் இடங்கள் மற்றும் அவற்றின் வெவ்வேறு அனுபவங்கள், முக்கியத்துவம் அல்லது கண்ணோட்டங்களைக் கொண்ட இடங்கள் போன்ற உரையாடல்களிலிருந்து வரும் பரந்த அளவிலான ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் பிற விஷயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில சமயங்களில் அவர்கள் வேறுபட்ட மொழியை எங்கே பயன்படுத்தினார்கள் என்பதையும் தெளிவுபடுத்த உதவியுள்ளனர். இவ்வாறு கடந்த காலத்தின் தவறான புரிதல்களையும் கருத்து வேறுபாடுகளையும் சமாளிக்க உதவியுள்ளன:

நியாயப்படுத்தும் கோட்பாடு குறித்த கூட்டு பிரகடனம் (ஜே.டி.டி.ஜே) 1999 இல் லூத்தரன்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் கையெழுத்திட்ட ஒரு வரலாற்று ஒப்பந்தமாகும். திருச்சபைகள் இப்போது “கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கடவுளின் கிருபையால் நியாயப்படுத்தப்படுவதைப் பற்றிய பொதுவான புரிதலைப் பகிர்ந்து கொள்கின்றன” என்று அது கூறுகிறது. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு, இது அடிப்படையில் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்தின் வேரில் இருந்த விசுவாசத்தால் நியாயப்படுத்தப்படுவதன் தன்மை குறித்த 500 ஆண்டுகால மோதலை தீர்த்தது. மற்ற தேவாலயங்களிலிருந்து கற்றுக்கொள்வதும் அவற்றின் இறையியல் ஆய்வுகளை புரிந்து கொள்வதும் புதியதல்ல. சீர்திருத்த சகாப்தத்திலும் அதற்குப் பின்னரும் இது மிகவும் தெளிவாகத் தெரிந்தது.

முப்பத்தொன்பது கட்டுரைகளின், கட்டுரை XIX –யிலிருந்து, 1572:

ஸ்ரீகிறிஸ்துவின் காணக்கூடிய திருச்சபை உண்மையுள்ள மனிதர்களின் சபை, அதில் கடவுளின் தூய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் கட்டளைப்படி சாக்கிரமந்துகள் முறையாக சேவை செய்யப்படுகின்றன, அவை எல்லாவற்றிலும் அவசியமானவை. ஃ

1530 லூத்தரன் ஆக்ஸ்பர்க் ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரிவு 7,

எப்போதும் என்றென்றும் ஒரே ஒரு தூய திருச்சபை இருக்கும் என்று திருச்சபைகள் கற்பிக்கின்றது. திருச்சபை என்பது அனைத்து விசுவாசிகளின் கூட்டமாகும், அதில் சுவிசேஷம் முற்றிலும் போதிக்கப்பட்டு சாகிரமந்திரங்கள் முறையாக நிர்வகிக்கப்படுகின்றன.'

? நீங்கள் எந்த வழிகளில் மற்ற திருச்சபைகளிலிருந்து கோட்பாட்டைக் கற்றுக்கொண்டீர்கள்? எதிர்காலத்தில் இதை எவ்வாறு ஊக்குவிக்க முடியும்?

## 7. கோட்பாட்டை வெளிப்படுத்த புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் உள்ளதா?

வெவ்வேறு கலாச்சாரங்களுடன் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்கள் விசுவாசத்தைப் புரிந்துகொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் புதிய வழிகள் தேவைப்படுகிறது:

ஆங்கிலிகன்–சீர்திருத்த சர்வதேச ஆணையம், கடவுளின் ஆட்சி மற்றும் எங்கள் ஒற்றுமை, (1984):

ஒரே சொற்களை மீண்டும் சொல்வதன் மூலம் ஆர்த்தடாக்ஸி வெறுமனே பராமரிக்கப்படுவதில்லை. திருச்சபை அதன் மிஷனரி முன்னேற்றத்தில், பல கலாச்சாரங்களிலிருந்து விசுவாசத்திற்கு கொண்டுவரப்படுபவர்களின் மொழிகளில், உண்மையான ஒரே கடவுளைப் பற்றி கற்பித்தல் மற்றும் வழிபாட்டில் தங்கள் மனதை வழிநடத்தும் வார்த்தைகளை எப்போதும் கண்டுபிடிக்கும். அதேபோல், ஒவ்வொரு புதிய யுகத்திலும் திருச்சபை தொடர்ந்து விசுவாசத்தை ஒப்படைக்கையில், இந்த புதிய தலைமுறைகளின் மொழியில், அந்த நம்பிக்கையை சரியாக வெளிப்படுத்தும் புதிய சொற்களைக் கண்டுபிடிக்கும். விசுவாசத்தின் அதிகாரபூர்வமான தரமான வேதவசனங்களைப் பெறுவது எங்கள் ஒற்றுமை, கற்பித்தல் மற்றும் வழிபாடு ஆகிய இரண்டிலும் சீர்திருத்தத்தின் தொடர்ச்சியான விளைவின் அவசியத்தை ஒப்புக்கொள்கிறது. எங்கள் ஒன்றியம், கற்பித்தல் மற்றும் வழிபாடு ஆகிய இரண்டிலும் சீர்திருத்தத்தின் தொடர்ச்சியான விளைவின் அவசியத்தை ஒப்புக்கொள்கிறது. இது விசுவாசத்தின் அதிகாரப்பூர்வ தரமாக வேதவசனங்களைப் பெறுவதன் மூலமாகும்.

உண்மையில், திருச்சபைகள் பல நூற்றாண்டுகளாக சீர்திருத்தம் மற்றும் கோட்பாடுகளை மறு ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டுள்ளது:

உலக திருச்சபை மன்றத்தின், ஸ்ரீசத்தியத்தின் வரிசைமுறை – ஒரு எக்குமெனிகல் விளக்கம், ரோமன் கத்தோலிக்க–டபிள்யூ.சி.சி கூட்டு பணிக்குழுவின் அறிக்கை (1990):

18. சில கிறிஸ்தவ மரபுகள் பிரதிபலிப்பின் அடிப்படையில், "சத்தியங்களின் வரிசைக்கு" இரண்டு பரிமாணங்களை உணர்த்துகின்றன. ஒருபுறம், கடவுளின் வெளிப்பாடு பழைய உடன்படிக்கையிலிருந்து புதிய உடன்படிக்கைக்கு மாறுவது போன்ற ஒரு ஒழுங்கை வெளிப்படுத்துகிறது; மறுபுறம், கடவுளின் யாத்ரீக மக்களின் வெளிப்பாட்டிற்கு விசுவாசத்தின் தொடர்ச்சியான பதிலில், ஒருவர் நேரம் மற்றும் இடத்தின் வரலாற்று மற்றும் கலாச்சார சூழல்களால் பாதிக்கப்பட்டுள்ள சத்தியத்தின் அமைப்பை வெளிப்படுத்தபடுகிறது. இந்த மாறுபட்ட பதில்கள் வெளிப்பாட்டிற்கான விசுவாசத்தில் வெவ்வேறு அமைப்பை விளைவித்தன. மேலும், பல்வேறு திருச்சபைகளின் பல்வேறு வரலாற்று காலங்களில், குழுக்கள் மற்றும் திருச்சபைகளுக்குள் உள்ள தனிநபர்களின் கோட்பாட்டு வெளிப்பாட்டில் இது வலியுறுத்துப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சபை மன்றமானது வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின் விசாரணையில், கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய தெய்வீக விஷயங்களைப் புரிந்துகொள்வதிலும், அறிவிப்பதிலும் வெவ்வேறு முறைகள் மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளன என்பதை அங்கீகரிக்கிறது. இன்னும் சில நேரங்களில் ஒரு பாரம்பரியம் வெளிப்படுத்தப்பட்ட இரகசியத்தின் சில அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு மற்றொன்றை விட மிக நெருங்கி வந்துள்ளது, அல்லது அவற்றை தெளிவான முறையில் வெளிப்படுத்தியுள்ளது (எக்குமெனிசம் குறித்த ஆணை, 17).

19. எக்குமெனிகல் உரையாடலில் திருச்சபைகள் அவற்றின் பாரம்பரியம் மற்றும் வாழ்க்கையில் தற்போதுள்ள படிநிலைகள் அல்லது சத்தியங்களின் வரிசைமுறைகளைப் பற்றி அதிகம் அறிந்திருக்கலாம். உரையாடல் மாற்றங்கள் மூலம் திருச்சபையின் சொந்த போதனைகளை அமைப்பதற்கும் வழிவகுப்பதற்கும், மேலும் இது நல்லுறவை எளிதாக்கும். உதாரணமாக, சீர்திருத்த திருச்சபைகள் எபிஸ்கோபல் ஊழியத்தின் முக்கியத்துவத்தை அவற்றின் உண்மைகளின் அமைப்பில் ஒப்புக்கொள்கின்றன; மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபை விசுவாசத்தால் நியாயப்படுத்துதல் கோட்பாட்டைப் பற்றிய புதிய பாராட்டுக்களைக் கண்டுபிடிக்கிறது. இவை ஒன்றிணைவதற்கான அறிகுறிகள்.

? உங்கள் அனுபவத்தில் சில கோட்பாடுகளைப் பற்றிய புரிதலை மற்ற திருச்சபைகளுடனான சந்திப்புகளினால் உங்களை மாற்றச் செய்தனவா? இது வளமானதா? இது எப்படி ஊக்குவிக்கபட முடியும்?

2

# மதங்களின் கோட்பாடு என்ன?

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை, ஒரு நல்ல இறையியல் நூலகத்தை அணுக அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தை பெற இயலாதபோது, முறையான முறையில் படிப்பது எவ்வாறு?

ஒரே நம்பிக்கையை ஒப்புக்கொள்வது: அப்போஸ்தலிக்க விசுவாசத்தின் ஒரு எக்குமெனிகல் விளக்கம் ஒப்புதல் வாக்குமூலம் நிசீன்-கான்ஸ்டான்டினோபாலிட்டன் க்ரீட் (Creed) (381), என்ற எக்குமெனிகல் உரை , 1991 முதல் இதைச் செய்வதற்கான வழியை வழங்கினது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நம்பிக்கை மற்றும் ஒழுங்கு இயக்கத்திலிருந்து வெளிவந்த மிக முக்கியமான நூல்களில் ஒன்றான இந்த நூல் சமகால திருச்சபையின் அடித்தள அறிக்கையாக மாறியுள்ளது. இது ஜெர்மன் புராட்டஸ்டன்ட் இறையியலாளர் வொல்.ஃ.பார்ட் பன்னன்பெர்க் மற்றும் பிரெஞ்சு ரோமன் கத்தோலிக்க இறையியலாளர் ஜீன் டில்லார்ட் உள்ளிட்ட முன்னணி இறையியலாளர்களால் எழுதப்பட்டது. அதன் நிலை பல முறை மீண்டும் அச்சிடப்படுவதற்கு வழிவகுத்தது. இது 2010 யில் டேம் மேரி டேனரின் புதிய முன்னுரையுடன் மீண்டும் வெளியிடப்பட்டது. இது இப்போது உலக திருச்சபைகளின் மன்றத்திலிருந்து ஆன்லைனில் இலவசமாகக் கிடைக்கிறது. (விவரங்களுக்கு இந்த ஆய்வு வழிகாட்டியின் முடிவில் பட்டியலைக் காண்க. விசுவாசம் மற்றும் முறைமைக்கு தொடர்புடைய பல ஆதாரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.) இந்த உரை பண்டைய நிசேயா விசுவாச பிரமாணத்தின் சொற்களை அச்சிட்டு விளக்குகிறது, இது மேற்கத்திய மற்றும் கிழக்கு திருச்சபைகளால் தங்கள் வழிபாட்டில் அறிவிக்கப்படுகிறது. இது கிறிஸ்தவ விசுவாசத்தில் அவர்கள் கொள்கின்ற ஒற்றுமையின் முக்கிய வெளிப்பாடு. இவ்வுரை நிசேயா விசுவாச பிரமாண பிரிவின் மூலம் பகுதிபகுதியாகச் சென்று, அவை ஒவ்வொன்றின் பொருளையும் சித்தரிக்கவும், பயன்படுத்தவும் செய்கிறது.

இது ஒவ்வொரு பிரிவிலும் மூன்று விஷயங்களைச்

செய்கிறது: இது வரலாற்று புலமைப்பரிசின் தெளிவான விவரங்களையும் மற்றும் அதன் பொருளையும் விளக்குகிறது; இது ஒவ்வொரு உறுதிமொழியின் விவிலிய அடிப்படையையும் முன்வைக்கிறது; ஒரு நீண்ட 'இன்றைய விளக்கம்' பிரிவில், இந்த உறுதிப்படுத்தல் எவ்வாறு நவீன யுகத்தின் சவால்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைக் காட்டுகிறது; எடுத்துக்காட்டாக, நாத்திகம், மதச்சார்பின்மை மற்றும் பிற மதங்கள்.

இந்த உரையுடன் கூடுதல் ஆதாரங்கள் இந்த அத்தியாயத்தின் முடிவில் பட்டியலிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

1982 முதல் 1991 வரை அதன் வெளியீடு உரையை உருவாக்குவதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த மேரி டேனர் அதை பின்வரும் வழியில் கருத்துரைக்கிறார்:

சமகால உலகின் சவால்கள் 1980 களின் சவால்களுக்கு ஒத்ததாக இல்லை. ஆனால், கிறிஸ்துவின் நற்செய்தியை நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும் எல்லா மக்களுக்கும் பறைசாற்றும் குரல் கொடுப்பதற்கு உலகிற்கு அதிக தேவை இருக்கும் ஒரு காலம் வரலாற்றில் இருக்க முடியாது. இந்த ஆய்வை மேற்கொள்பவர்கள், விசுவாசத்தை ஆராய்வதற்கான புதிய வழிகளிலும், நமது பொதுவான நம்பிக்கை சவால் செய்யும் வழியிலும், இன்றைய உலகில் நிகழ்வுகளால் சவால் செய்யப்படுவதிலும் இது எவ்வாறு அவர்களை வழிநடத்துகிறது என்பதைக் கண்டுபிடிப்பார்கள். ஒரே நம்பிக்கையை ஒப்புக்கொள்வது திருச்சபைகளுக்கு உதவ ஒரு அற்புதமான கருவி... ஒருவர் பொதுவான ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கான வாய்ப்பை புரிந்து கொண்டு, இதை ஒன்றாக வாழந்து காட்ட வேண்டும். (p.viii)

அறிக்கை பத்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, மேலும் இவை மதத்தின் முக்கிய கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பத்து அமர்வு ஆய்வு திட்டத்திற்கு நல்ல உட்பிரிவுகளை வழங்குகின்றன:

1. **ஒரே கடவுள்** - பக்கங்கள் 16-27
2. **சர்வவல்லமையுள்ள தந்தை** - பக்கங்கள் 27-34
3. **படைப்பாளரும் அவருடைய படைப்பும்** - பக்கங்கள் 34-42
4. **இயேசு கிறிஸ்து - நம்முடைய இரட்சிப்புக்காக அவதாரம் -** பக்கங்கள் 43-54
5. **இயேசு கிறிஸ்து - நம்முடைய நிமித்தம் துன்பமும் சிலுவையில் அறையப்பட்டதும்** - பக்கங்கள் 54-64

6. **இயேசு கிறிஸ்து - எல்லா தீய சக்திகளையும் வெல்ல உயிர்த்தெழுந்தார்** - பக்கங்கள் 64-72
7. **பரிசுத்த ஆவியானவர்** - பக்கங்கள் 73-81
8. **ஒரு புனித, கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தலிக்க தேவாலயம் -** பக்கங்கள் 81-90
9. **பாவ மன்னிப்புக்கான ஒரு ஞானஸ்நானம்** - பக்கங்கள் 90-96
10. **மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் மற்றும் வரவிருக்கும் உலக வாழ்க்கை** - பக்கங்கள் 97-104

## நடைமுறைக்கான அணுகுமுறை

முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உரையின் ஒவ்வொரு பகுதியையும் மீண்டும் படித்து பதிலளிப்பதற்கான ஒரு வழி இங்கே, அதாவது கற்றலுக்கான "பார் - மதிப்பிடு - செயல்படு" அணுகுமுறையைப் பயன்படுத்தி கற்றல் ஆகம்:

### பார்த்தல்

முதல் படி என்பது தேவாலயத்தின் வாழ்க்கையில் நிசேயா விசுவாச பிரமாணம் நியமிக்கப்பட்ட கோட்பாட்டின் அர்த்தத்தையும் பங்கையும் காண்பதும், உள்ளூர் அல்லது பிராந்தியமாக இருந்தாலும், அந்த பாத்திரத்தில் யார் ஈடுபட்டுள்ளனர், அது என்ன விளைவைக் கொண்டுள்ளது என்றும் காண்பதாகும். எப்போதும்போல, கற்பித்தல் செயல்முறையின் இந்த முதல் படிக்கு கவனமாக பகுப்பாய்வு தேவைப்படுகிறது, மேலும் இது ஒரு குழுப் பயிற்சியாகச் செய்யப்படுகிறது, இதில் இந்த யதார்த்தத்தைப் பகிர்ந்துகொள்பவர்கள் மற்றும் அதை ஒன்றாக பகுப்பாய்வு செய்யக்கூடியவர்கள் உள்ளனர்.

முதல் அத்தியாயத்தைப் போலவே, இந்த கேள்விகளையும் முழு அளவிலான வழிகளில் கையாள முடியும். உதாரணத்திற்கு, ஒட்டுமொத்த சமூகத்தில் கோட்பாட்டின் புரிதலும் உரிமையும் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்ப்பதன் மூலம், திருச்சபை வழிபாட்டிலும், அதன் மக்களின் சீடத்துவத்திலும், அதன் பிரசங்கத்திலிருந்தோ அல்லது சிறிய ஆய்வுக் குழுக்களிடமிருந்தோ எந்த வழிகளில் கற்பிக்கப்படுகிறது என்பதும், அதன் பிரதிபலிப்பாக இருக்கலாம். சமூகம் கூடுகின்ற இடங்களாகிய அல்லது அமைப்புகளாகிய தேவாலயத்தின் கட்டடக்கலை தளவமைப்பு மற்றும் அலங்காரம், அல்லது சமூகத்தின் வழிபாட்டு மற்றும் சமூக

வாழ்க்கை, அல்லது பரந்த சமூகத்தில் அது எவ்வாறு செயல்படுகிறது? இந்த கோட்பாடு திருச்சபை சமூகத்தில் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக ஒருஹ செயலில் பங்கு வகிக்கிறதா? மக்கள் அதைப் பார்த்து சொந்தம் என்று கருதுகிறார்களா? இது கூட்டாக அல்லது தனித்தனியாக கடவுளின் மக்களுக்கு வழிகாட்டி ஊக்கமளிக்கின்றதா? அல்லது அது அவர்களின் பொதுவான வாழ்க்கைக்கு ஓரளவுதானா? இந்த பயிற்சியின் நோக்கம் என்னவெனில் அறிவு, புரிதல் மற்றும் பதிவுகள் சேகரித்தல் மற்றும் சூழ்நிலையின் பயனுள்ள ஒரு சுருக்கத்தை தொகுப்பது. ஆகவே, இதன் நோக்கம் ஒரு இறுதி பதிலை வழங்குவதல்ல, ஆனால்

சில பொருத்தமான கேள்விகளைக் கேட்டுப்பதும், திருச்சபை சமூகத்தின் யதார்த்தத்தில் இந்த கோட்பாடு ஒரு அர்த்தமுள்ள பங்கைக் கொண்டிருக்கிறதா என்று பார்ப்பதும் ஆகும்.

## மதிப்பிடுதல்

இரண்டாவது படி, குறிப்பிட்டுள்ளபடி, இந்த விஷயத்தில் ஒரு விமர்சன முன்னோக்கைப் பெறுவது பற்றியது. இதை நாம் வேதங்கள் மூலமாகவும் திருச்சபைகளில் கற்பித்தல் மூலமாகவும் நமது சூழலில் தற்போது என்ன இருக்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமாகவும் பெற இயலும். குறிப்பிட்ட கோட்பாடுகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட இந்த படி ஒரே விசுவாசத்தை ஒப்புக்கொள்வதில் தொடர்புடைய பகுதியைப் படிப்பதை உள்ளடக்குகிறது, பிறகு, முதல் படியால் கண்டுபிடிக்கப்பட்டதை எவ்வாறு ஆராய்வது என்பது இந்த பகுதி சாதகமாக விமர்சிக்கின்றது.

வேறுவிதமாக எடுத்துக்கொண்டால், இந்த உரை எங்கள் திருச்சபை சமூகத்தின் வாழ்ந்த யதார்த்தத்தை எந்த வழிகளில் சவால் செய்கிறது? ஏற்கனவே உள்ளதை எந்த வழிகளில் இது உறுதிப்படுத்துகிறது? புரிதல் மற்றும் வெளிப்பாட்டில் என்ன மாற்றங்கள் மற்றும் வளர்ச்சி இது ஊக்குவிக்கக்கூடும்?

## செயல்படுதல்

இரண்டாவது கட்டத்தில் பெற்ற திருச்சபை வாழ்க்கை குறித்த விமர்சன முன்னோக்குக்கு பதிலளிக்கும் வகையில், மூன்றாவது படி என்னவென்றால், நடைமுறையில் என்ன நடக்கிறது, என்ன நடக்க வேண்டும் என்பதற்கான இடைவெளியை எவ்வாறு

குறைக்கப் போகிறோம் என்பதை தீர்மானிப்பதாகும். இதில், நமது வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் கோட்பாடு எவ்வாறு சூழல் ரீதியாக உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது பற்றியது. அதன் பிறகு, அந்த மாற்றங்களைச் செய்யத் தீர்மானித்தல். எப்போதும்போல, இது ஒரு கூட்டுப் பயிற்சியாக சிறப்பாக செய்யப்படுகிறது, இதன்மூலம் இந்த மாற்றங்களில் நாம் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கும் மற்றும் நாம் செய்யும் கடமைகளுக்கு ஒருவரையொருவர் தாங்கிக்கொள்வதற்கும் முடியும்.

சிரமம் என்னவென்றால், இரண்டாவது படி தனிப்பட்ட மற்றும் கார்ப்பரேட் மட்டத்தில் வெவ்வேறு கோட்பாடுகளுடன் இணைக்கப்பட்ட சாத்தியமான செயல்களின் முழு அளவையும் வெளிப்படுத்தியிருக்கும். இவை அனைத்தும் அதிகமாய் இருக்கிறபடியினால் ஒரே நேரத்தில் முயற்சிக்க கடினமாயிருக்கும். எனவே எந்த நடவடிக்கையில் கவனம் செலுத்த வேண்டும் என்பது குறித்து ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். மேலே உள்ள அத்தியாயத்தைப் போல, நாம் அதிகமாக எந்தந்த கோட்பாடுடன் தொடர்புடைய நடவடிக்கையை அதிகம் எடுக்க போகிறோம் என்று கேட்பதன் மூலம், திருச்சபை, சமூகம் அதன் வழிபாடு, பணி மற்றும் சீடத்துவத்தில் ஒரு சூழல் ரீதியான உண்மையான மற்றும் ஊக்கமளிக்கும் விதத்தில் தனது நம்பிக்கையை வெளிப்படுத்த இதை தீர்மானிக்க முடியும். இது முதன்மையாக செய்யப்பட வேண்டியதாகும்.

# 3

# திருச்சபை என்றால் என்ன?

**திருச்சபை, அதன் சிறப்புப்பணிகள், ஆங்லிகன் மற்றும் பல்வேறு திருச்சபை ஒழுங்குகள்.**

ஆங்லிகன்களின், திருச்சபை பற்றிய நம்பிக்கை,இந்த உலகத்தில் திருச்சபையின் சிறப்புப்பணிகள்,திருச்சபை ஒழுங்குகள் எவ்வாறு சபை மக்களை போஷித்து ஆத்தும ஆகாரமளிக்கிறது என்பது குறித்ததான விஷயங்களில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூற்றுகள் முக்கியமான நுணுக்கமான பார்வையளிக்கிறது.

பல்வேறு உரையாடல்களின் வழியாக பொதுவான இறையியல் கருத்துக்களைப் பெற்று ஆங்லிகன்கள் பங்களித்த பல்வேறு ஒப்பந்தங்கள் மற்றும் கருத்துக்கள் மூலமாக இறையியல் இடர்பாடுகளை இந்த அத்தியாயம ஆராய்கிறது.

என்ன சொல்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு வலுசேர்க்கும் வகையில், பல்வேறு பகுதிகள் இந்த இறையியல் கருத்துக்களை முக்கியமான கேள்விகளுடன் அணுகுகிறது.

இந்த கருத்துக்கள் நம் உள்ளூர் சபைகளில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது அல்லது வெளிப்படுத்தப்பட முடியும் என்பது போன்ற நம் சிந்தனையைத்தூண்டும் ஒரு கலந்துரையாடல் - கேள்வி ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறது.

**பார்த்தல்**

மற்ற அத்தியாயங்களில் உள்ளதைப்போன்றே நாம் இருக்கும் உள்ளூர் சபைகளில் உள்ள புரிந்து கொள்ளல் என்ன என்பதைப் பார்த்தலே நம் முதல் படிநிலை. இதற்கு சமுதாயப்பகுப்பாய்வு தேவை. ஒரு குழுவாக இதைச்செய்தால் மிக நல்லது எனலாம்.சிலர் உண்மை நிலையைப பகிர்ந்து கொள்ளலாம்.குழுவாக அதைப்பகுப்பாய்வு செய்யலாம்.ஆகவே இந்நிலையில், ஆராதனை,திருச்சபையின் சிறப்புப்பணிகள் மற்றும் சபை மக்களின் சீஷத்துவம் போன்றவைகளை சபை எவ்வளவு புரிந்துகொண்டிருக்கிறது? அதை எங்ஙனம் வெளிப்படுத்துகிறது?

சபைமக்களின் புரிந்து கொள்ளல் எவ்வாறு பிரசங்க பீடத்திலும் சபை ஆய்வுக்குழுவிலும் சொல்லித்தரப்படுகிறது? மேலும் பிரசங்க மேடையிலிருந்து சொல்லப்பட்டவைகளையும், குழுவாக ஆராயப்பட்டவைகளையும் சபை எப்படிப்புரிந்து கொள்கிறது சிந்திக்கிறது ஏற்றுக்கொள்கிறது? சபை ஒன்றாகக்கூடுகின்ற அமைப்பு எப்படி இருக்கிறது அதாவது சபை கட்டிட அமைப்பு, வழிபாட்டு முறை,சமூக வாழ்க்கை முறை அல்லது இந்தப்பரந்த சமுதாயத்துடன் சபை எவ்வாறு தொடர்பு கொள்கிறது?

முன்பு குறிப்பிடப்பட்டது போலவே நோக்கம் என்னவென்றால் தெரிந்து கொண்டவை புரிந்துகொண்டவை எண்ணங்கள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து சூழ்நிலை பற்றிய பயனுள்ள ஒரு சித்திரத்தை உருவாக்குவதாகும்.

நம் நோக்கம் முழுமையான பதில் தருவதல்ல சில பொருத்தமான கேள்விகளைக்கேட்பதின் மூலம் புரிந்துகொள்ளல் சபையின் உண்மை வாழ்க்கையில் அர்த்தமுள்ள பங்கு வகிக்கிறதா எனப்பார்த்தல்

**கணித்தல்**

இரண்டாம் படிநிலை என்னவென்றால் சபையைக்குறித்ததான ஆங்லிகனகள் மற்றும் மற்ற சபைகளின் கருத்துக்களைக் கற்பதன் மூலம் எடுத்துக்கொண்ட விவாதப் பொருளின் மீது விமர்சிக்கும் பார்வை கொள்ளுதல் பின் முதல் படிநிலையில் வெளிப்படுத்தப்பட்ட சபையின் உண்மை வாழ்க்கையினை எப்படி அது நேர்மறையாக விமர்சனம் செய்கிறது என்பதை ஆராய்தல்.ஏற்கனவே இருந்ததை எவ்வழிகளில் அது உறுதிப்படுத்துகிறது? புரிந்து கொள்ளுதலிலும், எண்ணங்களிலும் எம்மாதிரியான மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் நாம் அழைக்கப்படுகிறோம்? இந்த அத்தியாயத்தின் மீதப்பகுதி இதற்கு ஆதாரமாக உள்ளது.

**செயல்படுதல்**

இரண்டாம் படிநிலையின் விமர்சனப்பார்வையின் தொடர்ச்சியான மூன்றாம் படிநிலை என்பது நடந்துகொண்டிருப்பவைகளுக்கும், நடக்கவேண்டியவைகளுக்கும் நடுவில் உள்ள இடைவெளியைக் குறைப்பதை நடைமுறைப்படுத்துவது பற்றி தீர்மானித்தல். இந்த நிலையில் ஆங்லிகன் சபைக்கோட்பாடு எவ்வாறு சூழல் ரீதியான உண்மையான எழுச்சியூட்டும் பங்கினை ஆராதனையிலும் சிறப்புப்பணியிலும் சீஷத்துவத்திலும் அளிக்க வேண்டும் என்று முடிவு செய்து பின்

அம்மாற்றங்களை நடைமுறைப்படுத்த தீர்மானம் செய்தல் பற்றியதாகும். எப்போதும் போல ஒரு கூட்டுமுயற்சியாக இதைச்செய்தால் மிகச்சிறப்பாகச் செய்யப்படும். மாற்றங்களைக்கொண்டு வர விளையும் நமது அர்ப்பணிப்பில் கூட்டு முயற்சி ஒருவரையொருவர் தாங்கி ஒருவரையொருவர் ஆதரிக்க வழிவகைசெய்கிறது.

இடர்பாடு என்னவெனில்,கணிப்பு எனும் இரண்டாம் படிநிலை, தனிப்பட்ட நிலையிலும், பெருநிறுவன நிலையிலும் கோட்பாட்டின் பல்வேறு அம்சங்களோடு தொடர்புடைய எல்லா சாத்தியமான செயல்பாடுகளையும் தெரிவிக்கிறது

இவை அதிகமாக உள்ளதால் எல்லாவற்றையும் ஒன்றாக நடைமுறைப்படுத்த முடியாது,எனவே எந்த செயல்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும் என ஒரு யுக்திநிறைந்த முடிவு எடுக்க வேண்டும்

மேலே உள்ள அத்தியாயத்தில் உள்ளதுபோல, சபைக்கோட்பாட்டின் கருத்தோடு தொடர்புடைய எந்தச்செயல்பாடு சபைமக்களின் விசுவாச வாழ்க்கையில் சூழ்நிலையில் உண்மையோடு எழுச்சியூட்டும் வகையிலே, ஆராதனை செய்ய, சபைச்சிறப்புப்பணி செய்ய, சீஷத்துவத்தோடு வாழ மிக உதவிசெய்கிறது எனக்கேட்டு தீர்மானிக்கப்படவேண்டும். இந்தச்செயலே முதலில் செய்யப்படவேண்டும்.

# கணித்தலுக்கான ஆதாரங்கள

## 1. எங்கே துவங்குவது?

இரண்டாம் அத்தியாயத்தைக் கட்டமைக்கும்போது முதலில் நாம் பிரமாணங்களையும், அவைகளின் சபை குறித்ததான விளக்கங்களையும் பார்க்க வேண்டும்.

நிசேயா விசுவாசப்பிரமாணம்

ஒரே பரிசுத்த கத்தோலிக்கத்திருச்சபையையும், அப்போஸ்தலத்திருச்சபையையும் ,விசுவாசிக்கிறோம்.

அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

பரிசுத்த கத்தோலிக்கத்திருச்சபையை விசுவாசிக்கிறேன்

ஆங்லிகன்களோடு தொடர்புடைய திருச்சபைகள், நிசேயா விசுவாசப்பிரமாணமே விசுவாசத்தின் அடிப்படை அறிக்கை எனக்கருதுகிறார்கள். முன்பு ஞானஸ்நானத்துக்காக பயன்படுத்திய அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தை விரிவு படுத்தி நிசேயா(325) மற்றும் கான்ஸ்டான்டி நோபுல்(381) என்பவர்களின் சங்கங்களில், சபையின் அடையாளங்கள் எனக்கருதப்படுகிற ஒன்றான திருச்சபை, அது புனிதமானது, அது கத்தோலிக்க சபை, அது அப்போஸ்தலத்திருச்சபை, எனும் வார்த்தைகளைக்கொண்டு வரைவுபடுத்தப்பட்டதுதான் நிசேயா விசுவாசப்பிரமாணம். எனவே ஆங்லிகன்கள் ஒரே புனித கத்தோலிக்க அப்போஸ்தலத்திருச்-சபையின் அங்கம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் இந்த உரிமை அவர்களுக்கே உரித்தான ஒன்று அல்ல என்பதை உணர வேண்டும்.மற்ற சபைகளும் கூட இதில் பங்கு கொண்டு திருச்சபையை உருவாக்க உதவி செய்கின்றன. இந்த அங்கீகாரம் மறைந்திருக்கிறது. ஆனால் மற்ற கிறிஸ்தவர்களோடு ஒன்றாக இணைந்து பணி செய்வதற்கு வழிகளைத் தெரிவிக்கிறது.

“போர்வொ” பொதுவான அறிக்கை (7,58.a.i.)

நாம் ஒவ்வொருவரும் நம் சபையானது இயேசுக்கிறிஸ்துவின் ஒரே பரிசுத்த அப்போஸ்தலத்திருச்சபையின் அங்கம் எனப்புரிந்து கொள்கிறோம்.

அனைத்து தேவ மக்களின் அப்போஸ்தலப்பணியில் உண்மையாகப்பங்கு கொள்கிறோம்.

நாம் ஒருவருக்கொருவர், நம் சபைகள் இயேசுக்கிறிஸ்துவின் ஒரே பரிசுத்த கத்தோலிக்க அப்போஸ்தலத்திருச்சபைக்கு சொந்தமானது எனவும், அனைத்து தேவ மக்களின் அப்போஸ்தலப்பணியில் உண்மையாகப்பங்கு கொள்கிறோம் எனவும் ஒப்புறுதிஅளிக்கிறோம்

ஆர்ச் பிஷப் ரோவன் வில்லியம்ஸ் தெளிவு படுத்துவதைப்போல நம் சபையானது தன்னைச்சார்ந்து தானாகவே இருக்காது. அதற்கு வெளிநோக்கிய பார்வை உண்டு. மற்ற கிறிஸ்தவர்களோடு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நற்செய்தியை வார்த்தையாலும் செயலாலும் பகிர்ந்து கொள்ளும் அப்போஸ்தலப்பணியில் பங்கு கொள்வதாய் இருக்கிறது.ஒரே பரிசுத்த கத்தோலிக்க அப்போஸ்தலத்திருச்சபை என்பதன் பொருள் என்னவென்றால், சபை திரியேக தேவனோடு எப்படித்தொடர்பு கொள்கிறதோ, அதன் மையத்திற்கு நம்மை அழைத்துச்செல்கிறது.

சபையின் நான்கு அடையாளங்களும் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியவை. சபை ஒன்று. ஏனெனில் கிறிஸ்துவும் ஒருவரே. சபை பரிசுத்தமானது. ஏனெனில் கிறிஸ்துவும் பரிசுத்தர். சபை கத்தோலிக்க சபை. ஏனெனில் கிறிஸ்து எல்லோருக்கும் இரட்சகர். சபை அப்போஸ்தலத் திருச்சபை. ஏனெனில் பிதா இயேசுவை அனுப்பியதுபோல் இயேசுவானவர் நம்மை அனுப்புகிறார். அதாவது சபையின் தன்மையைப்புரிந்து கொண்டோமானால், இயேசுக்கிறிஸ்து யார் என்பதையும், அவர் என்ன செய்கிறார் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

? எவ்வழிகளில் சபையின் வாழ்க்கை, அது தேவனுடையது; தேவனுடைய செயல்களுக்குரியது என்பதைத் தெளிவு படுத்துகிறது? எவ்வாறு சபை இதை இன்னும் மிகத்தெளிவாகக்காண்பிக்கலாம்?

## 2. திருச்சபையின் அழைப்பு என்ன?

சபையானது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவிலிருந்து வந்து அவருடைய பணிக்கு நேராக நம்மை அழைத்துச் செல்கிறது. சபை புது சிருஷ்டியின் அடையாளமாக, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் அறிவிக்கப்படுகிறது. அது புது சிருஷ்டியோ அல்லது அதன் முழுமையோ அல்ல ஆனால் எப்பொழும் அது குறித்த ஒரு முன்னுகர்வை (foretaste) அளிக்க விழைகிறது

**உலக திருச்சபைச் சங்கம், சபை: ஒரு பொதுவான பார்வையை நோக்கி 1,5**

சபை மற்றும்அதன் பணிகுறித்த கிறிஸ்தவப்புரிந்து கொள்ளுதல் சகல சிருஷ்டிக்குமான தேவனின் பெருந்திட்டம் (அல்லது பொருளாதாரம்) – இயேசுக்கிறிஸ்துவால் வாக்களிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட "ராஜ்யம்" – எனும் பார்வையில் வேரூன்றி இருக்கிறது. சபையானது, கிறிஸ்துவின் உடலாக பரிசுத்த ஆவியின் வல்லமையால் செயல்பட்டு,அதன் ஜீவனளிக்கும் பணியை தீர்க்க தரிசன, அன்பிரக்க ஊழியத்தில் தொடர்ச்சியாக செய்கிறது.

சபையானது, கிறிஸ்துவின் உடலாக பரிசுத்த ஆவியின் வல்லமையால் செயல்பட்டு,அதன் ஜீவனளிக்கும் பணியை தீர்க்க தரிசன,அன்பிரக்க ஊழியத்தில் தொடர்ச்சியாக செய்து உடைந்த உலகத்தை குணமாக்கும் தேவனின் செயலில் பங்கு கொள்கிறது. கிறிஸ்துவின் ரட்சிப்பின் நற்செய்தியை வார்த்தையிலும் செயலிலும் உலகத்துக்கு அறிவிக்கும் பணியில்,சபை ஒழுங்குகளை முக்கியமாக பரிசுத்த நற்கருணை ஒழுங்கைப் பின்பற்றி எப்பொழுதும் சபை தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கிறிஸ்தவ சமூகமாய் இருக்கிறது.

**ஆங்லிகன் – ரோமன் கத்தோலிக்க சர்வதேச ஆணையம், சபை கூட்டமைப்பு 18**

சபை என்பது விசுவாசிகள் ஒருவரோடொருவருடனும் தேவனுடனும் கொண்டிருக்கும் ஐக்கியம் . அது தேவன் உருவாக்குகிற புதிய மனித நேயத்தின் அடையாளமாகவும் பரிசுத்த ஆவியின் தொடர்ச்சியான பணியின் வாக்குறுதியாகவும் இருக்கிறது. அதன் பணியானது சுவிசேஷத்தின் மீட்கும் வல்லமையின் உருவமாகவும் அந்த வல்லமையை வெளிப்படுத்துவதாகவும், விசுவாசத்தின் மூலமாகவும் கிறிஸ்துவின் புது வாழ்க்கையில் பங்கடைவதின் மூலமாகவும் பெற்றுக்கொண்ட ஒப்புறவாகுதலை (தேவனோடு) குறிப்பதாகவும் இருக்கிறது.

ஆங்லிகன் ஐக்கியத்தின் இந்தப்பணிக்கான உண்மை விசுவாசம், கிறிஸ்துவினுடைய பணியின் 5 அடையாளங்களை வெளிப்படுத்தும் அர்ப்பணிப்பணிப்பின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

**சிறப்புப்பணியின் 5 அடையாளங்கள்**

<u>கிறிஸ்துவின் பணியே சபையின் பணி.</u>

1.ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப்பிரசங்கித்தல்

2.புது விசுவாசிகளுக்கு போதித்து ஞானஸ்நானம் கொடுத்து (கிறிஸ்துவில்) வளரச்செய்தல்

3.மக்களின் தேவைகளை அன்பான சேவையின்மூலம் சந்தித்தல்

4.சமூகத்தின் அநீதியான கட்டமைப்பை மாற்றுதல் எல்லா வன்முறைகளையும் எதிர்த்தல், சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பின் தொடர்தல்

5.படைப்பின் நேர்மைத்தன்மையை (வைெநபசவைல) பாதுகாக்கப் பாடுபடுதல், பூலோக உயிர்களின் வாழ்க்கையை புதுப்பித்தல் மற்றும் நிலை நிறுத்துதல

? உங்கள் அனுபவத்தில் சபை வாழ்க்கை எவ்வாறு தேவராஜ்யத்தின் அடையாளமாகவும் முன்னுகர்வாக (foretaste) இருக்கிறது? அது எவ்வாறு இன்னும் வெற்றிகரமான நல் விளைவை ஏற்படுத்துவதாக இருக்கலாம்?

## 3. எவ்வாறு சபை ஒன்றாக இருக்கிறது?

உலகத்திலுள்ள ஏராளமான பல்வேறு சபைகள் இதை பதிலுறைப்பதற்கு மிகக்கடினமான கேள்வியாக்குகிறது. மிகச் சரியான பதிலைப்பெற இந்த ஆய்வு வழிகாட்டியில் இந்தப்பகுதி மிக நீளமாக இருக்கும்.

ப்ராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள் மிகத்தாக்கம் நிறைந்த பதில் தந்தனர். மார்ட்டின் லூதர் மற்றும் பிலிப் மெலாங்க்தன் ஆகியோரால் வரைவு செய்யப்பட்ட ஆக்ஸ்பக் ஒப்புதல் வாக்குமூலமானது, (1530) சபையை "சுவிசேஷத்தை உண்மையாகப்பிரசங்கித்தல்," சபை ஒழுங்குகளை சரியாக நடைமுறைப்படுத்துதல்", "பரிசுத்தவான்களின் சபையில்" போன்ற பதங்கள் மூலம் வரையறுக்கிறது.

**ஆக்ஸ்பக் ஒப்புதல் வாக்குமூலம்,ஆர்ட்டிகில்–VII சபை பற்றியது (1530)**

திருச்சபை என்பது பரிசுத்தவான்களின் கூட்டமைப்பு. அதில் சுவிசேஷம் சரியான முறையில் போதிக்கப்படவேண்டும்.சபை ஒழுங்குகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மக்களால் நிறுவப்பட்ட,சபை பாரம்பரியங்கள், சடங்குகள்,விழாக்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்ற தேவை இல்லை. இங்கிலாந்தில் இந்த வரையறை 39 ஆர்ட்டிக்கில்கள், என்பதில் வரைவு செய்யப்பட்டுள்ளது.

**ஆர்ட்டிக்கில்கள் (1572)**

XIX சபையைப்பற்றியது:– காணக்கூடிய கிறிஸ்தவ சபை என்பது விசுவாச மக்களின் கூட்டமைப்பு அதில் கலப்பில்லாத தேவனின் தூய வார்த்தை போதிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி சபை ஒழுங்குகள் தேவையான எல்லாவற்றிலும் தேவையான முறைப்படி மிகச்சரியாக அனுசரிக்கப்படுகிறது.

XX. சபையின் அதிகாரம் பற்றியது:– மத சடங்குகளையும் ,விழாக்களையும், வரையறை செய்யவும், விசுவாசம் பற்றிய விவாதங்களின் மேலும், சபைக்கு முழு அதிகாரம் உள்ளது.ஆனாலும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளுக்கு மாறுபாடான எதையும் நிர்ணயம் செய்தல் சட்டத்திற்குப்புறம்பானது. நிர்ணயிக்கப்பட்டவைகள் வேதத்தின் ஒருபகுதியைமட்டும் விளக்குவதாகவும்,மற்றொரு பகுதிக்கு மாறுபாடாகவும் இருக்கக்கூடாது.பரிசுத்த ஆணைச்சட்டங்களுக்கு பாதுகாவலாகவும் சாட்சியாகவும் இருந்தாலும் அவைகளுக்கு எதிராக சபை எதையும் வரையரை செய்யக்கூடாது.மேலும் இரட்சிப்படைவதற்குத் தேவையில்லாத எதையும் நடைமுறைப்படுத்தக்கூடாது.

ஆக்ஸ்பக் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருப்பது போல ப்ராட்டஸ்டன்ட்களுக்கு மதக்கோட்பாடுகளுக்கு இசைந்து செல்வது அதாவது உண்மைச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்

என்பது என்ன மற்றும் சபை ஒழுங்கு முறைகளை சரியாக நடைமுறைப்படுத்துதல் என்பதின் பொருள் என்ன போன்றவைகளுக்கு இசைந்து செல்லுதல் சபை ஒற்றுமைக்குப் போதுமான அடித்தளமாக அமைகிறது. இந்தப்பார்வை ஆங்லிகனிசத்தில் உள் சேர்க்கப்பட்டதை 39 ஆர்ட்டிக்கில்கள் தெரிவிக்கிறது.

சீர்திருத்தம் ஏடையாபோரா (adiaphora) எனும் கொள்கையை ஏற்றுக்கொள்கிறது - அதாவது "புறக்கணிக்கப்படவேண்டியவை"- அல்லது இரட்சிப்புக்கு அடித்தளமாக இல்லாதவை- ஆக்ஸ்பக் ஆர்ட்டிகில் VII- இன் இறுதி வாக்கியத்திலும் மற்றும் 39 ஆர்ட்டிக்கில்கள் XX இலும் விளக்கப்பட்டுள்ளது. ஆலய நடைமுறைகள் சட்டபூர்வமாக மாறுவதை எதிர்பார்ப்பதை ஏற்றுக்கொள்கிறது அதாவது இரட்சிப்புக்கு எது தேவையில்லையோ அவைகளில் ஆலய நடைமுறைகள் மாறலாம்.

கிறிஸ்தவ சமுதாயம் ஒன்றோடு மற்றொன்று மாறுபடுகின்றபோது எப்படி சபை ஒன்றாக இருக்க முடியும்? என்ற இந்தக்கேள்வியில் ஒருங்கிணைக்கப்பட்ட கிறிஸ்தவ சபைகளின் கூற்றுகளின் நோக்கம் இருக்கிறது. அக்கூற்றுகள் "அவர்கள் ஒன்றாயிருக்க"(யோவான் 17;21) எனும் கிறிஸ்துவின் ஜெபத்தை உண்மையாக்க விழைகின்றன. இது பரிசுத்த பவுலின் பார்வை. ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு, எபேசியர் 4:4, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எபேசியர் 4:5, எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறார். எபேசியர் 4:6.

சபையின் ஒற்றுமையின் அடித்தளம் சுவிசேஷத்திலும் உள்ளூர் சபைகளிலும், பிரிவுகளிலும் இருக்கிறது. வாக்குமூலங்கள் இதை ஒப்புக்கொண்டு ஒற்றுமையை தெளிவாக விளக்குகிறது.

திருச்சபைகளில் காணப்படும் வித்தியாசங்கள்,தேவன் விரும்பிய திருச்சபைகளின் ஒற்றுமையை சீர்குலைப்பதாகப் பார்க்கப்படலாம்.அல்லது பல்வேறு திருச்சபைகள் தாம் பெற்றுக்கொண்ட பல்வேறு சுவிசேஷ வரங்களின்படி, பல்வேறு வழிகளில் வாழ தெரிந்துகொள்ளப்பட்டவை என நேர்மறையாகப் பார்க்கப்படலாம். லேம்பத் மாநாட்டில் (Lambeth Conference in 1920) ஆங்லிகன் பிஷப்கள், "கிறிஸ்தவ மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்" (Appeal to all Christian people) என்பதில் திருச்சபையின் இந்த இரு பரிமாண வித்தியாசங்கள் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கு வேண்டுகோள் லேம்பத் மாநாடு1920, தீர்மானம் 9**

நாம் அனைவரும் பல்வேறு குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான முழு ஐக்கியத்திற்கும் சொந்தமான வரங்களுடன் இணைந்திருக்கிறது. மற்றவைகளிலிருந்து தனக்கான வாழ்க்கையை வாழ விழைகிறது. இந்த உடைந்துபோன ஐக்கியத்தை தேவனுடைய சித்தத்திற்கு மாறானது என ஒப்புக்கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளைத்தடுத்து கிறிஸ்துவின் சரீரத்தை முடமாக்கும் குற்றத்தில் உள்ள எங்களது பங்கை வெளிப்படையாகத்தெரிவிக்கிறோம். எங்கள் முன் எழுந்து நிற்கும் பார்வையானது சபை பற்றியது. சபை உண்மையாகவே அது கத்தோலிக்க, உண்மைக்கு விசுவாசமானது. கிறிஸ்தவர்கள் என்று தங்களைச்சொல்லிக்கொள்கிறவர்களை ஒரு ஐக்கியமாக ஒன்றிணைக்கிறது. கடந்த காலத்திலிருந்து நிகழ் காலத்திற்கு மரபாக பாரப்பரியமாகக்கடத்தப்படுகிற எல்லாரும் பொதுவாகப் பெற்ற... இந்த ஒற்றுமைக்குள் கிறிஸ்தவ சமுதாயம் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டு தனக்கே உரித்தான தனித்தன்மையுடனான வழிபாடு மற்றும் ஆராதனையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. பன்முகத்தன்மை நிறைந்த வாழ்க்கை மற்றும் பக்தியின் மூலமாக முழு ஐக்கியத்தின் ஒற்றுமையும் நிலைநிறுத்தப்படுகிறது.

லேம்பத் வேண்டுகோள் சபை ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கிறது. உண்மை சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்றால் என்ன என்பதையும் மற்றும் சபை ஒழுங்குகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்துதலையும் புரிந்து கொண்டு பகிர்ந்து கொள்வதன் மூலம் மேலே கண்ட சபை ஒற்றுமையைப்போலவே சபையும் நிர்மாணிக்கப்படுகிறது என ப்ராட்டஸ்டன்ட்கள் நம்புகிறார்கள். ஆங்லிகன்களின் புரிந்து கொள்ளுதலில் சிகாகோவில் நடைபெற்ற சபை பிஷப்களுக்குரிய பொதுவான மாநாடு (General convention of the Episcopal Church Meeting in Chicago) மற்றும் லேம்பத் மாநாடு 1888 (Lambeth Conference) போன்றவற்றால் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சிகாகோ லேம்பத் நான்முக அடிப்படையில் சபை ஒற்றுமை போன்றவை.

**சிகாகோ லேம்பத் நான்முகத்தன்மை, லேம்பத் மாநாடு 1888 தீர்மானம் 11**

இந்த மாநாட்டின் கருத்தின்படி கீழே உள்ள வரையறைகள் (யசவஉைடநள) தேவனின் ஆசிர்வாதத்தின்படி நடக்கும மறு இணைவு குறித்ததான அணுகுமுறைக்கு அடிப்படை அளிக்கிறது

a. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய பரிசுத்த வேதாகமம் இரட்சிப்புக்குறிய எல்லா விஷயங்களையும் உள்ளடக்கி இருக்கிறது. இதுவே கட்டளையாகவும் உச்ச நிலையான விசுவாச அளவு கோலாகவும் இருக்கிறது.

b. அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம் ஞானஸ்நானத்திற்கு அடையாளமாகவும் நிசேயா விசுவாசப்பிரமாணம் கிறிஸ்தவ விசுவாசத்திற்கான போதுமான அறிக்கையாகவும் இருக்கிறது

c. கிறிஸ்துவானவரால் ஏற்படுத்தப்பட்ட ஞானஸ்நானம் மற்றும் கர்த்தரின் இரா விருந்து – நடைமுறைப்படுத்துவதற்கேதுவான கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் அவரால் நியமிக்கப்பட்ட முக்கியமான பகுதிகளுடன்

d. சரித்திர சிறப்புடைய பிஷப்கள் –சபை ஒற்றுமைக்கு தேவனால் அழைக்கப்பட்ட நாடு மற்றும் மக்களின் பல்வேறு தேவைகளுக்கேற்ப நிர்வாகத்தில் சூழலுக்குத்தக்கவாறு மாற்றி அமைத்துக்கொள்ளுதல்

லேம்பத் நான்முக அமைப்பின் நான்காவது விஷயம் சபையின் ஒழுங்கு மற்றும் ஊழியத்தையும் உள்ளூருக்கு ஏற்ப தம்மை மாற்றி அமைத்துக்கொள்கிற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிஷப்களின் முக்கியத்துவத்தையும் முதன்மைப்படுத்துகிறது. இது வெளிப்படையான ஒரு கேள்வியை முன்வைக்கிறது. சபை இருப்பதற்கு (latin, esse- to be) பிஷப்கள் தேவையா அல்லது ஆங்லிகன்கள் நம்புகிறபடி நடைமுறையில் தேவைக்காக அல்ல சபை நல்லமுறையில் செயல்படுபதை (Latin, bene esse – to be well)? நன்றாய் இருப்பதற்கு மேம்படுத்த அவர்கள் வழியாக இருக்கிறார்களா? அனைத்து சபைகளுக்கும் மேற்பார்வையிடும் அமைப்பு அல்லது அலுவலகம் இருக்கிறது. ஆனால் எல்லா சபைகளுக்கும் பிஷப்கள் இல்லை. (எ.கா கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து மெதடிஸ்ட் சபை )

லேம்பத் மாநாடு 1920 இதில் பிஷப்களின் கிறிஸ்தவ ஒற்றுமைக்கு வேண்டுகோளில் மேலாண்மை அலுவலகம் இல்லாத சமுதாயத்தின் ஊழியங்களின் ஆவிக்குறிய உண்மைத்தன்மையில் தெளிவாக இருக்கிறார்கள். மாறாக இந்த ஊழியங்கள் கிருபையினாலே நல் விளைவை ஏற்படுத்தி பரிசுத்த ஆவியானவருக்கு உரியதாக வெளிப்படையாக ஆசிர்வதிக்கப்படு-கிறது என நன்றியோடு ஒத்துக்கொள்கிறோம். ஆனாலும் வரலாற்று மற்றும் நிகழ்கால அனுபவங்களைக்கருத்தில் கொள்ளுதல் மேலாண்மை அலுவலகம் சார்பாக நாம் கோரும் உரிமையை நியாயப்படுத்துகிறது என அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர் மேலும் அது இப்பொழுதும் எதிர்காலத்திலும் சபையின் தொடர்ச்சியான நிகழ்வு மற்றும் ஒற்றுமையை நிலைநிறுத்த ஏதுவான முக்கியமான துணைக்கலம் என நாம் வலியுறுத்துகிறோம். (அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கு வேண்டுகோள், பற்றி VII)

சபை தலைமைத்துவம், மேற்பார்வை மற்றும் மேலாண்மை அலுவலகம் பற்றிய விவாதங்கள் ஆங்லிகன்களுக்கும், லுத்தரன்கள் மற்றும் சீர்திருத்த சபைகளை உள்ளடக்கிய பல ஒருங்கிணைந்த சபை பங்காளர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

இரு சபைகளுக்கும் எவ்வாறு முக்கியமான சபை மேலாண்மை மிகத்தேவையான ஒன்று என்பதை ஏற்றுக்கொள்வதில் உள்ள கருத்தொற்றுமை மிக முக்கியமானது ,மற்றும் உறவுகளின் முழு இணைவுக்கும் நேராக வழிநடத்துகிற எந்த ஒரு ஆங்லிகன் ஒப்பந்தத்திற்கும் அடிப்படையானது. மேலும் எல்லா ஆங்லிகன் சபைகளும் சபை மேலாண்மையில் பிஷப்களைப் பெற்றிருக்கும்போது ஆங்லிகன் சமூகத்தில் அங்கமாக உள்ள சபைகள் பிஷப்களுக்கும் சினாடிற்கும் மக்களுக்கும் இடையே உள்ள உறவுமுறைகளில் பல்வேறு விதமான கருத்து கொள்கிறது. சில பகுதிகளில் மிகுதியான செயலாட்சி அதிகாரத்தை பிஷப்களுக்குத் தருகிறது.சில பகுதிகளில் மிக சொற்பமான செயலாட்சி அதிகாரத்தை பிஷப்களுக்குத் தருகிறது.

ஒருங்கிணைந்த சபைகளான வட இந்தியத்திருச்சபை, தென் இந்தியத்திருச்சபை, நார்டிக் மற்றும் பால்டிக் லூத்தரன் சபைகளுக்கிடையேயான பொர்வொ ஒப்பந்தம், பிரிட்டிஷ் ஆங்லிகன் சபைகள், கனடாவில் உள்ள இவான்ஜெலிகல் லூத்தரன் சபை மற்றும் ஆங்லிகன் சபைகளுக்கிடையேயான வாட்டர்லூ அறிவிப்பு , பொதுவான இறைபணிக்கான அழைப்பு, எபிஸ்காப்பல் சபை மற்றும் அமெரிக்காவின் இவான்ஜெலிகல் லூத்தரன் சபை போன்றவற்றில் காண்கின்றபடி இந்த வித்தியாசங்கள் தீர்க்கப்பட முடியும்.

**முழு இணைவுக்கும் அழைக்கப்பட்டது; வாட்டர்லூ அறிவிப்பு, தீர்மானம்**

சுவிசேஷத்திற்கான இறைபணியில் எந்த வேலையும் சேய்வதற்கு தேவனின் சகப்பணியாளராக நாங்கள் தயார்நிலையில் இருக்கிறோம். கிறிஸ்துவில் ஏற்கனவே எங்களில் இருக்கிற ஒற்றுமையாகிய வரத்திற்காக தேவனுக்கு மகிமையை செலுத்துகிறோம். முழுச்சபையும் இந்த வரத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்காக ஜெபிக்கிறோம்.

பல திருச்சபைகளை ஒரே சபையாக மாற்ற, ஒருங்கிணைந்த சபைகள், கட்டமைப்பு ரீதியான ஒற்றுமைச்சூழலுக்கு செல்கிறது. சபைகளுக்கிடையேயான மற்ற ஒற்றுமை ஒப்பந்தங்கள் கட்டமைப்பு ரீதியான ஒற்றுமையை அடைய முடியவில்லை ஆனால் அவைகள்,முன் எப்போதும் இல்லாத முறையில் ஒன்றாகப் பணிசெய்து சபைகள் ஒன்றாக வளருவதை அனுமதிக்கின்றது.

ஒற்றுமையை நாடுவதில்,சபை ஒற்றுமையின் உச்சநிலை நோக்கம்,சபை நிறுவனம் மற்றும் அமைப்பு பற்றியதல்ல மாறாக அது முழு உலகமும் கிறிஸ்துவுடன் ஒப்புறவாகுதல் பற்றியது என்பதை எப்பொழுதும் முக்கியமாக ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

**?** உங்களுக்குத் தெரிந்த பல்வேறு சபைகளை நினைவில் கொண்டுவாருங்கள். எந்த முறைகளில் லேம்பத் நான்முக அமைப்பின் நான்கு அம்சங்களுடன் அவைகளைத்தொடர்பு படுத்தி அடையாளம் காண்பீர்கள்?

## 4. சபை எவ்வாறு பரிசுத்தமானது?

சபையின் பரிசுத்தம் என்பது தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட பரிசுத்த ஆவியால் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் எதிரொளிக்கப்படுகிறது ஓரளவிற்கு அவர்களால் அமைக்கப்படுகிறது.

**ஆங்கிலிகன் – ஓரியென்ட்டல் மரபுவழி (Orthodox) சர்வதேச கமிஷன்**

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் தனிப்பட்ட வாழ்க்கையையும், சபை ஒழுங்குகளையும் பரிசுத்தப்படுத்தி பூரணப்படுத்தி முழு பிரபஞ்சத்திலும் செயல்படுகிறதாய் இருக்கிறது என நாங்கள் உறுதி அளிக்கிறோம்.

சபையில் கிறிஸ்துவின் சரீரமாக விசுவாசிகள் பரிசுத்த ஆவியினாலே சுத்திகரிப்பை, பரிசுத்தமாக்குதலை, மேலும் நீதிமான்களாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால் சபையின் இயல்பு அதுதான். "கரைதிரையற்ற பரிசுத்தமே" தெய்வீக அழைப்பு. சபையின் பரிசுத்தம் அதன் உறுப்பினர்களின் நல்லொழுக்கங்களை சார்ந்தது அல்ல.அல்லது வாரும் பரிசுத்த ஆவியானவரே இந்த உலகத்தை புதியதாக்கும் என ஜெபிக்கும் மக்களின் குறைபாடுகள் சபையின் பரிசுத்தத்தை வலுவிழக்கச் செய்யாது.

பல்வேறு சபைகளின் ஒப்புதலுக்காக, நெறிமுறைகளைக்-கொண்டு பரிசுத்தத்தை எம்மட்டும் வரையறுக்கலாம் என்பது சபைகளின் வளர்ந்து வரும் கவலை பரிசுத்தத்தைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, அதன் முக்கியமான நோக்கம் உலகத்திற்கான சபையின் இறைபணியை விவரிப்பதாக இருக்க வேண்டும். பின்னிப்பிணைந்த சபையின் ஒற்றுமையும் பரிசுத்தமுமே தேவனின் வார்த்தைக்கு சபையின் மறுமொழியாக இருக்க வேண்டும்.

**ஆங்லிகன் – சீர்திருத்தமடைந்த சர்வதேச கமிஷன். தேவனின் ஆட்சியும் நமது ஒற்றுமையும் வேற்றுமையில் ஒற்றுமையே திரியேக தேவனின் அமைப்பு.**

பரிசுத்த அன்பாயிருக்கும் தேவன் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரை ஒன்றிணைத்து பரிசுத்த ஆவியானவரின் கிரியையினாலே குமாரனுடைய அன்பிலும், தேவனுக்குக்கீழ்ப்படிதலிலும் நம்மை பங்கு கொள்ளச்செய்கிறது. இந்தப்பரிசுத்தமான அன்பு ஒருவரை மற்றொருவருடன் இணைக்கிறது. நாம் ஒருவரை ஒருவர் தள்ளிவிடுவோமானால் அது தேவ கிருபையை தள்ளிவிடுவதற்கு சமம். நாம் தனியாகப்பிரிந்திருக்கும் நிலையில் ஒருபோதும் திருப்தியாக அமர்ந்திருக்கக்கூடாது காரணம் என்னவெனில்,தேவனின் எல்லையில்லா கிருபை

தமது அன்பான குமாரனுக்குள் நம்மை ஏற்றுக்கொண்டு,பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அவருடைய வாழ்க்கையிலே நம்மை ஒன்றாக இணைத்து திரியேக தேவனின் வேற்றுமையில் ஒற்றுமை எனும் எனும் வாழ்க்கை வாழ நம்மை அழைக்கிறது.

சபையின் பரிசுத்தம்,தனிமனிதனின் பரிசுத்தத்துடன் உள்நோக்கிய தனிமனித பக்தி மற்றும் நெறிமுறைகளை மட்டும் சார்ந்து அமையவில்லை. ஆனால் உலக மக்களின் தேவைகளை சந்திக்க வேண்டிய வெளி நோக்கிய பார்வையின் அடிப்படையிலும் அமைகிறது. தேவபணி இந்த உலகத்திற்கும் சபையின் பணிகளுக்கும் பல்வேறு ஒருங்கிணைந்த சபைகளின் பணிக்கும் மிக முக்கியமானது.

**ஆங்லிகன்–ரோமன் கேத்தலிக் சர்வதேச கமிஷன், கிறிஸ்துவில் வாழ்க்கை: ஒழுக்கங்கள், ஐக்கியம் மற்றும் சபை 5–7**

தேவனின் குழந்தைகளாக நமது உண்மையான சுதந்திரம் தேவனுக்கு சேவை செய்வதிலேயே இருக்கிறது.நமது உண்மையான சந்தோஷம் தேவனின் அன்புக்கும் கிருபைக்கும் நாம் காண்பிக்கின்ற விசுவாசத்திலும் அன்பிலும் இருக்கிறது. நாம் கர்த்தரை மகிமைப்படுத்தவும் அவரில் மகிழவும் படைக்கப்பட்டிருக்கிறோம். தேவனில் அமைதியையும் முழுநிறைவையும் நாம் காணும் வரை நம் இருதயம் தத்தளிக்கும்

ஒழுக்கமான வாழ்க்கை என்பது மனித நேயத்தின் செழுமையும் நிறைவும் இதற்காகவே எல்லா மனிதர்களும் படைக்கப்பட்டுள்ளனர். அடிப்படையான தார்மீகக்கேள்வி என்னவென்றால் நாம் என்ன செய்யவேண்டும்? என்பது அல்ல எம்மாதிரியான மனிதர்களாக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்? என்பதே. தேவனின் பிள்ளைகளாக, தேவனைப்போன்று வாழ்வதற்கு தார்மீகக் கீழ்ப்படிதல் வலுசேர்க்கிறது. உண்மையான ஆளுமையின் வேரும் பிறப்பிடமும் தேவனின் அன்பிலும் வாழ்க்கையிலும் இருக்கிறது.

ஒழுக்கமான வாழ்க்கை வாழ சமுதாயமும் அழைக்கப்படுகிறது:

**ஆங்லிகன்–ஆர்த்தடாக்ஸ் இறையியல் உரையாடல்,தேவனின் உருவத்தில் சாயலில்.**

படைப்புகளை,நமக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வரமாகிய அன்பைக்கொண்டு அணுகுதல், தனிமனிதனும் சமுதாயமும் தாராள மனப்பான்மையுடன் வாழவும், சுயநலமில்லாத, சிக்கனமான, சுயகட்டுப்பாட்டுடன் கூடிய செயல்களுடன் வாழ்க்கை வாழ அறைகூவல் விடுக்கப்படுகிறது. மனிதர்களாக நமது பணி என்னவென்றால் படைப்புகளுக்குறிய ஆசிர்வாதங்கள் நியாயமாக எல்லா நாடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் .வறுமைக்கு எதிரான போராட்டம் உலகப்பிரகாரமாகவும் ஆவிக்குறிய பிரகாரமாகவும் உடனடியாக கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

பரிசுத்தம் என்பது ஒரு விரிவான கருத்து:

**ஆங்லிகன் மெதடிஸ்ட் சர்வதேச கமிஷன் எல்லா உலகத்திற்குள்ளும்.**

விசுவாசத்திற்கான வெஸ்லியன் அவசியங்கள், பரிசுத்த வாழ்க்கை மாற்றத்தையும், நியாயத்தையும், பக்தி செயல்களையும், இரக்க செயல்களையும் உள்ளடக்கி இருக்கிறது. சபை இறைபணியில் காட்டும் விசுவாசமானது பரிசுத்தத்தின் முக்கியமான ஒரு பகுதியாக இருக்கிறது.

பரிசுத்தம் என்பது மிக மிக முக்கியமான ஒரு பகுதியாக ஆங்லிகன் ஐக்கியத்தின் இறைபணியின் ஐந்து குறியீடுகளில் உள்ளது

? சபையில் பரிசுத்தத்தை இன்று நீங்கள் எங்கே காண்கிறீர்கள் தனிநபரிடம் அல்லது ஒரு நிறுவனத்திடம்? சபை இறைபணியில் இந்த பரிசுத்தம் எவ்வாறு மேம்படுத்தப்பட முடியும்?

## 5. கேத்தலிக் சபை எப்படி இருக்கிறது?

சபை என்றால் கேத்தலிக் ஏனென்றால் அது எல்லாவற்றிற்கும் பொறுத்தமானது. கேத்தலிக் எனும் சொல் கிரேக்க வார்த்தை “காத் ஹாலோஸ்” என்பதிலிருந்து வந்தது. அதன் பொருள் “முழுமைக்கும் உரித்தானது.” தேவனுடைய சபை உள்ளூர் வெளிப்பாடாகத்-தோன்றினாலும் “கேத்தலிக்”எனும் சொல் தேவனுடைய சபை உலகளாவியது என்று ஞாபகப்படுத்துகிறது. தேவனுடைய முழு சபையும் அதன் பகுதிகளால் அமைக்கப்பட்டிருந்தாலும் அதனிலும் மேம்பாடு அடைந்ததாக இருக்கிறது.

**ஆங்லிகன்–ஓரியென்ட்டல் ஆர்த்தடாக்ஸ் சர்வதேச கமிஷன்.**

**பரிசுத்த ஆவியானவரின் பவனியும் வேலையும் 11–12**

பரிசுத்த ஆவியானவர் எல்லா சத்தியத்திற்கும் நேராக நம்மை வழிநடத்தி நம்மை விடுதலையாக்குகிறார் என உறுதிப்படுத்துகிறோம். அவரே சபையின் முழுமைத்தன்மைக்கு மூலமானவரும் உத்தரவாதம் அளிப்பவரும், உலகம் முழுவதிலும் ஒரே தேவன் இயேசுக்கிறிஸ்துவின் கீழ் அவருடைய ராஜ்யத்தில் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் வெவ்வேறு விதமாக வெளிப்பாடு அடைகிறார் இந்த உலகளாவிய, சபை முழுமைத்தன்மைக்குரிய அண்டம் முழுவதிலும் உள்ள அடையாளங்கள் உள்ளூர் சபைகளில் தனித்தன்மையோடு வெளிப்பாடு அடைகிறது. பிராந்திய உள்ளூர் சினாட் இந்த மிகப்பெரிய முழுமையின் பகுதியாக இருக்கிறது. பரிசுத்த ஆவி முழு சபையின் முழுமைத்தன்மை உள்ளூரில் வெளிப்பாடடைய உதவுகிறது.இந்த வெளிப்பாடு உலகளாவிய சபைகளின் பகுதிகளின் மொத்தத்தை விட பெரியது.

சபை ஒரு கேத்தலிக் (முழுமையானது) என்பது பற்றிய கலந்துரையாடலில் சில சமயங்களில் இந்த சொல் பல்வேறு பொருள்படும்படி பயன்படுத்த வேண்டி இருக்கும். ப்ராட்டஸ்டன்ட் சபைகளில் சபை ஒரு கேத்தலிக் எனும்போது அது மேன்மையானது என புரிந்து கொள்ளப்படுகிறது. ஆங்லிகன்களுக்குள் நடக்கும் விவாதங்களில் கேத்தலிக் எனும் சொல்லிற்கு வழிபாட்டு முறை அல்லது இறையியல் எனும் பொருள் தரும்படி பயன்படுத்தப்படுகிறது. எப்படியானாலும் நம்பகமான இந்த "சபை ஒரு கேத்தலிக்" எனும் கூற்று இந்த வேறுபாடுகளையெல்லாம் தாண்டி சபை ஒரு கேத்தலிக் என்பது "சபையில் எல்லாப்படைப்புகளும் ஒருவருக்கொருவர் சொந்தமாக ஒன்றாக இருக்கிறார்கள்" என்பதையே உறுதிப்படுத்துகிறது.

**ஆங்லிகன்–ரோமன் கேத்தலிக் சர்வதேச கமிஷன், வழியில் ஒன்றாக நடப்பது 26**

எல்லாமனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராய் இருக்கிறார்.(1தீமோ 2;4). தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத்தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.(1தீமோ2:5,6). உலகத்தை இரட்சிக்க தேவன் இயேசுவானவரை அனுப்பியது போல(யோ 3;16,17) இரட்சிப்பின் பணியைத் தொடர்ச்சியாகச் செய்ய சீஷர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரால் அனுப்பப்படுகின்றனர். (யோ30;21). "மிசியோ டெய்" (MISSIO DEI -MISSION OF CHRIST) என்பதை புனிதச்சடங்கு மூலம் வெளிப்படுத்தினால் அதுவே சபை. (ARCIC,சபை ஒரு ஐக்கியம் 16–24). சபை என்பது ஒரு மிஷனரியாக அடையாளப்படுத்தப்படுவதே சர்வதேச நோக்கம். "உனக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசிர்வதிக்கப்படும்" என ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக ஒரு மிஷனரி சபை பார்க்கப்படுகிறது. (ஆதி 12 ;1–3)

இறைவனின் திருப்பணியில் சபையின் பங்கு என்ன என்பதைக்கண்டு கொண்டு உறுதிப்படுத்துவதே சபை ஒரு கேத்தலிக் என்பதை உறுதி செய்வதாகும். சபை ஒரு கேத்தலிக் என்பது கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் செய்பவர்களுக்கு மட்டும் சேவை செய்வது அல்ல மாறாக முழு உலகத்திற்கும் ஆசிர்வாதங்களைக் கொண்டுவர நாடுதல் ஆகும்.

**ஆங்லிகன்–ரோமன் கேத்தலிக் சர்வதேச கமிஷன் சபை ஒரு ஐக்கியம் 3**

ஐக்கியம் என்பதின் உண்மைப்பொருளை அறிய சபையைப்பற்றிப் பேசினால் மட்டும் போதாது மாறாக அடி மனதில் ஆழ்ந்த தேவையோடு இருக்கும் முழு உலகத்தையும் கருதிப் பார்க்க வேண்டும் ஏனென்றால் மனிதசமூகம் சுதந்திரத்தையும்,நீதியையும், சமாதானத்தையும், மரியாதையுடன் கூடிய கண்ணியத்தையும் ஆவலுடன் வாஞ்சிக்கிறது.

**ஆங்லிகன் சீர்திருத்த சர்வதேச கமிஷன்.தேவனின் ஆட்சியும் நமது ஒற்றுமையும் 17**

கிறிஸ்தவ ஒற்றுமை குறித்ததான நமது தேடல், எல்லா மக்களையும், பொருள்களையும், கிறிஸ்துவுக்குள் ஒப்புறவாக்க வேண்டும், என்ற தேவ நோக்கத்தின் சூழலில், சீராகப் பார்க்கப்படவேண்டும்

? இந்தக்கூற்றுகளின் அடிப்படையில் சபையின் கேத்தலிக் தன்மையை உங்கள் சபை எவ்வாறு வெளிப்படுத்துகிறது?இந்தத் தன்மை மேலும் எவ்வாறு சிறப்பாக வெளிப்படுத்தப்படலாம்?

## 6. சபை எவ்வாறு அப்போஸ்தல (திருத்தூதர்) பண்பிற்குரியதாக இருக்கிறது?

சபை கேத்தலிக் ஆகவும் அப்போஸ்தலிக் ஆகவும் இருக்கிறது. ஆதியிலிருந்து கிறிஸ்துவின் போதனைவரையிலும் அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்ட போதனைகளின் தொடர்ச்சியை காலமும் நேரமும் கடந்து உறுதிப்படுத்துகிறது.

**ஆங்லிகன் ஐக்கியமும் பாப்டிஸ்ட் உலகக்கூட்டணியும், உலகம் சுற்றி உரையாடல்கள் 9**

பாப்டிஸ்ட்களும் ஆங்லிகன்களும் இருமடங்கு தொடர்ச்சியான அறிவைப்பெற்றுள்ளனர் நேரடியாகப் புதிய ஏற்பாட்டு திருச்சபையுடனும் (வேதம்) காலம் காலமாக கேத்தலிக் சபையின் வரலாற்றுடனும் (பாரம்பரியம்) சபையின் அப்போஸ்தலத்துவத்தின் உறுதிப்படுத்துதல் ஒவ்வொரு தலைமுறைக்குமான சுவிசேஷ செய்தியின் விளக்கத்தின் தேவையை அடையாளம் கண்டுகொள்கிறது.

**ஆங்லிகன் லுத்தரன் சர்வதேச கமிஷன், புல்லாச் அறிக்கை கூ73**

அப்போஸ்தலர்களின் போதனைகளினாலேயும், சுவிசேஷ சபை ஒழுங்குகளைப் பின்பற்றுவதாலும், ஐக்கியத்தினாலும், மேலாண்மையினாலும், உண்டாகும் சபையின் அப்போஸ்தலத்துவம், சபைக்கு கிறிஸ்துவில் அளிக்கப்பட்ட தேவனின் வரம். அப்போஸ்தல சுவிசேஷத்தின் மூலம் உலகத்தின் சகல ஜாதிகளையும் சீஷராக்க தேவன் சபையை உலகத்திற்குள் அனுப்புகிறார். இப்படியாக அப்போஸ்தலத்துவம் முதலில் சுவிசேஷத்திற்குரியது, பின்பு வார்த்தையின் ஊழியத்திற்கும், சபை ஒழுங்குகளுக்கும் உரியது இவையெல்லாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினாலே,அப்போஸ்தலருக்கும்,அவர்கள் மூலமாக சபைக்கும் அருளப்பட்டது. வித்தியாசமான விளக்கத்தின் மூலமாக ஒவ்வொரு புது சூழ்நிலையின் தேவைகளை சந்திப்பதற்கு அப்போஸ்தலத்துவத்திற்கு, அசலான அடிப்படையான அப்போஸ்தல சாட்சிகளுக்குக் கீழ்ப்படிதல் அவசியமாகிறது.

இந்தத் தொடர்ச்சியின் அறிவு வரலாற்று முன்னெடுப்புகளை சார்ந்து இருக்கிறது.

**பொர்வொ (Porvoo) பொதுவான அறிக்கை 7**

அப்போஸ்தல சபையின் பாரம்பரியத்தில் விசுவாசம், ஆராதனை மற்றும் அனைத்து சபைகளின் ஆவிக்குறிய தன்மை அனைத்தும் வேர் கொண்டிருக்கிறது. நேரடியாகவும் சீர்திருத்த உட்பார்வையுடனும் ஆரம்பகால மற்றும் இடைக்கால சபையின் தொடர்ச்சியாக நாம் இருக்கிறோம். நமது சபை இயேசுக்கிறிஸ்துவின் ஒரே பரிசுத்த கேத்தலிக் சபையின் ஒரு பகுதி எனவும், அனைத்து தேவ மக்களின் ஒரே அப்போஸ்தல இறைபணியில் உண்மையாகவே நாம் பங்கு கொள்கிறோம் எனவும் நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்கிறோம் .மேற்கத்திய கிறிஸ்தவ பாரம்பரிய வழிபாட்டு முறையிலும் விசுவாசத்தினாலும் தேவனுடைய வார்த்தையினாலும் சபை ஒழுங்குகளாலும் கிருபையினால் உண்டாகும் நீதியை வலியுறுத்தும் சீர்திருத்தத்திலும் நாம் பங்குள்ளவர்களாயிருக்கிறோம்.

சபையின் அப்போஸ்தலத்துவத்திற்கும் ஊழியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

**உலக திருச்சபை சங்கம் – ஞானஸ்நானம்–திருவிருந்து– ஊழியம் 34**

சபையில் அப்போஸ்தலப் பாரம்பரியம் என்பது நிலையான அப்போஸ்தலப்பண்புகளில் நிலைத்திருப்பதும், அப்போஸ்தல விசுவாசத்திற்கு சாட்சியாக இருப்பதும் சுவிசேஷத்தை அறிவித்தலும் அதற்கு புது விளக்கம் அளிப்பதும் ஞானஸ்நானத்தையும் ஐக்கிய விருந்தையும் பின் பற்றுவதிலும் ஊழியப் பொறுப்புகளை அளிப்பதிலும் ஜெபத்திலும் அன்பிலும் சந்தோஷத்திலும் துன்பத்திலும் வியாதி உள்ளவர்களுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் சேவை செய்வதிலும் உள்ளூர் சபைகளெல்லாம் ஒற்றுமையாய் இருப்பதிலும் தேவன் ஒவ்வொருவருக்கும் தந்த வரங்களை பகிர்ந்து கொள்வதிலும் இருக்கிறது.

அப்போஸ்தலத்துவத்தின் கலந்துரையாடலில் முக்கியமான கேள்வி என்னவென்றால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களின் பங்கு, முக்கியமாக பிஷப்கள் சபையின் அப்போஸ்தலத்துவத்தை உறுதிப்படுத்தலில், பொருத்தமான ஒரு கேள்வியாக மற்ற சபைகளுடன் உள்ள தொடர்பை ஆராய்வதாக இருக்கிறது.

**ஆங்லிகன் லுத்தரன் சர்வதேச கமிஷன், புல்லாச் அறிக்கை கூ56**

இதுவரையில் போதனையில் அப்போஸ்தலத்துவத்தின் கருத்தில் ஒரு பொது நம்பிக்கை உண்டு .சபையின் வாழ்க்கையும் ஊழியமும், அடிப்படையான அப்போஸ்தல சாட்சி மற்றும் உலகத்திற்குள் போகும் பணியின் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். இரண்டு பாரம்பரியத்திற்கு நடுவில் இருக்கும் முக்கியமான விவாதப் பொருளான அப்போஸ்தலத்துவம் எனும் பரந்த கருத்தில் அடுத்தடுத்து வரும் பிஷப்களின் பங்கு இருக்கிறது.

சபையின் தன்மை மற்றும் ஊழியத்தின் பங்குபற்றிய கலந்துரையாடலில் ஞாபகப்படுத்தப்படவேண்டியது என்னவென்றால்

சபையின் அப்போஸ்தலத்துவம் நிறுவனத்தைப் பாதுகாப்பதில் நோக்கமாயிருக்கக்கூடாது தேவனின் திருப்பணியை முன்னெடுத்துச் செல்வதில் இருக்க வேண்டும்

**ஆங்லிகன் ஆர்த்தடாக்ஸ் இணைந்த கோட்பாட்டு கமிஷன் டூப்லின் (னுரடிடநை) ஒப்பந்த அறிக்கை 16**

ஒவ்வொரு தலைமுறையிலும் சபை உலகத்திற்கான அப்போஸ்தலப் பணியில் பங்கு கொள்கிறது. சபை உலகத்திற்குரியது அல்ல (யோ 27;14) ஆனால் மனித சமூகத்திற்குள், மனித சமூகத்துடன், மனித சமூகத்திற்காக இருக்கிறது அதன் பணி. பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே சமூகத்தைப் பாதுகாப்பதும் மறுரூபப்படுத்துவதுமாகும். இந்த திருப்பணியில் பிரசங்கித்தல், போதித்தல், ஆராதனை செய்தல், தர்மம் செய்தல், அநீதிக்கு எதிராக சாட்சியம் அளித்தல், மறைவான ஜெப வாழ்க்கை, சாட்சியாக மரித்தல் போன்றவை அடங்கும்.

**ஆங்லிகன் லுத்தரன் சர்வதேச தொடர்ச்சி குழு நயாகரா (யேயபயசய) அறிக்கை 23,24**

சபையின் அப்போஸ்தலத்துவம் என்பது உலகம் வாழ்வதற்காக தன்னைத்தானே பலியிடுதல் (தன்னைப்பாதுகாப்பது அல்ல). இப்படியாக சபை தேவனுடைய ஆட்சிக்குப் பணி செய்கிறது. பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சிக்கு அல்ல. சபை தானே வகுத்த பணிக்காக அல்ல. கிறிஸ்துவின் துன்புறுதல், மற்றவர்களைப்பாதிக்கும் அன்பு எனும் இந்தப்பணிக்காக சபை சேவை செய்கிறது.சபையின் திருப்பணி கிறிஸ்துவானவர் வாழ்ந்த வழியில் போதிக்கப்பட்டு வடிவம் கொள்கிறது.தேவ ராஜ்யம் வரலாற்றில் இப்படியாக மேலோங்கிய கருத்தாக இருக்கிறது.

? மேலே உள்ள மேற்கோள்களின்படி உங்கள் சபை வாழ்க்கையின் எந்த அம்சங்கள் சபைக்குரிய அப்போஸ்தலத்தன்மையை வெளிப்படுத்துகிறது? இந்தத்தன்மையை மேலும் எவ்வாறு சிறப்புறச் செய்யலாம்?

## 7. ஒழுங்குகளுக்கு சபை எந்த இடம் அளிக்கப்படுகிறது.?

இந்த உலகத்தில் கர்த்தரின் திருப்பணிக்காக சபை ஒழுங்குகளின் மூலமாக தேவ பிள்ளைகள் அழைக்கப்பட்டு பலப்படுத்தப்படுகின்றனர். தேவ மக்கள் கிறிஸ்துவை பிரதிபலிப்பதை அதாவது கிறிஸ்துவின் சரீரமாக இந்த உலகத்தில் வாழ்வதை சபை ஒழுங்குகள் சாத்தியமாக்குகிறது,

**ஆங்லிகன்– ஆர்த்தடாக்ஸ் இறையியல் விவாதம்.தேவனின் ஒப்புமையிலும் சாயலிலும்**

**முன்னுரை**

மனுடாவதாரம், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல், பரமேறுதல் இந்த நிகழ்வுகளின் விரிவாக்கத்தின் மூலமாக சபை ஒழுங்கின் வாழ்க்கையில் அனைத்து மனிதத்துவமும் அனைத்து படைப்புகளுடன் சேர்ந்து தேவனுடைய இரட்சிப்பின் வேலையில் பங்குகொள்ள அழைக்கப்படுகிறது.

**ஆங்லிகன் சீர்திருத்த சர்வதேச கமிஷன்– தேவனின் ஆட்சியும் நமது ஒற்றுமையும் 67,85**

தேவனுடைய வார்த்தையும் சபை ஒழுங்கும் உயிர்த்தெழுந்த கர்த்தரின் பிரசன்னத்தில் உண்மை நிலையை அடைகிறது. தேவனுடைய வார்த்தை மற்றும் சபை ஒழுங்கின் ஊழியத்தில் முழு சபையும் மறுபடியும் மறுபடியும் மன்னிப்புப்பெற்று இந்த உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தில் தன்னை புதுப்பித்துக்கொள்கிறது.

தேவ வார்த்தை மற்றும் சபை ஒழுங்கின் மூலமாக நம்பிக்கை மற்றும் குணமாக்கும் சுவிசேஷச் செய்தியை சபை உலகத்திற்கு அறிவிக்கிறது.

**பொர்வொ பொதுவான அறிக்கை 13**

விசுவாசத்தினால் உண்டாகும் கிறிஸ்தவ நம்பிக்கையை அறிவிக்க தெளிவின்றி இருக்கும் சமுதாயத்திற்கு ஒரு அர்த்தம் தர நமது சபைகள் ஒன்றாக அழைக்கப்படுகின்றன. மறுபடியும் அவை தேவனின் குணமாக்கும் அன்பை அறிவிக்கவும், துன்புறுத்தப்பட்டு, அடக்கப்பட்டு, அநீதி இழைக்கப்பட்ட ஜாதிகளை ஒப்புறவாக்கவும் அழைக்கப்படுகின்றன. இந்தப் பொதுவான அறிக்கை வார்த்தையிலும் சபை ஒழுங்கிலும் தேவனுடைய விசித்திரமான அன்பை,அவருடைய பிரசன்னத்தை,தேவ ராஜ்யத்தை வெளிப்படுத்துகிறது.

**ஆங்லிகன் ஆர்த்தடாக்ஸ் இறையியல் விவாதம், திரியேக தேவனின் சபை 5**

சபை ஒழுங்கில் ஈடுபடுதலிலும், விசுவாசிகள் ஒருவருக்கொருவர் கொள்ளும் ஐக்கியத்திலும்,பரிசுத்தவான்களின் வாழ்க்கை யிலும் முழுக்கிறிஸ்தவ சபையின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவர் வெளிப்பட பிதாவின் வரமாகிய பரிசுத்த ஆவி சபையை ஆவியைச் சுமந்து செல்லும் சரீரமாக மாற்றுகிறது.

பரிசுத்த ஆவியின் மூலமாக கிறிஸ்துவின் பிரசன்னத்தை உறுதிப்படுத்துகிற தேவ வார்த்தை மற்றும் சபை ஒழுங்கின் மூலமாக சபை கட்டப்பட்டுள்ளது.

**ஆங்லிகன் லுத்தரன் சர்வதேச கமிஷன் புல்லாச் அறிக்கை சூ58**

பரிசுத்த ஆவிக்குள், கிறிஸ்துவின் உண்மையான பிரசன்னமாகுதலிலும், செய்கைகளிலும், வார்த்தை மற்றும் சபையின் பரிசுத்த ஒழுங்கின் மூலமாகவும் சபை தொடர்ச்சியாகக் கட்டப்பட்டு, மருரூபப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு வருகிறது.

பரிசுத்த ஆவியின் கிரியைகளின் மூலமாக சாக்ரமந்துகள் (பரிசுத்த சபை ஒழுங்குகள்) பூமிக்கும் வானத்துக்கும் ஒரு பாலமாக அல்லது தேவராஜ்யத்தின் ஒரு முன்னுகர்வாக அமைகிறது.

**ஆங்லிகன் ஒரியென்ட்டல் ஆர்த்தடாக்ஸ் சர்வதேச கமிஷன், பரிசுத்த ஆவியின் பவனியும் கிரியைகளும் 11**

பழையவற்றை ஞாபகப்படுத்துவதன் மூலமாகவும் (நற்கருணை) சபையின்

இறையியல் செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது போலவே பரலோக ஆராதனையில் இணைந்திருக்கிறதற்கு ஒப்பான நற்கருணையை அநுசரிப்பதில் பரிசுத்த ஆவியானவர் பூலோக சபையை பரலோகத்தோடு இணைக்கிறார்

ஞானஸ்நானமும் பரிசுத்த நற்கருணையும் இந்த இணைக்கின்ற வேலையை செய்து விசுவாசிகளை பலப்படுத்தி இந்த உலகத்தில் தேவனின் திருப்பணியில் பங்கு கொள்ளச்செய்கிறது.

**ஆங்லிகன் ரோமன் கேத்தலிக் சர்வதேச கமிஷன், சபை ஒரு ஐக்கியமாக 24**

சபையின் பரிசுத்த ஒழுங்குகளின் தன்மை ஒரு அடையாளமாக, துணைக்கலமாக, ஐக்கியத்தின் முன்னுகர்வாக, நற்கருணையைக் கொண்டாடுவதில் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தரின் நினைவுகூறுதலைக் கொண்டாடுவதிலும், அவருடைய சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாவதிலும் சபை அதன் தோற்றமான பிதாவோடு ஐக்கியமாக உள்ள கிறிஸ்துவோடு ஐக்கியத்தை சுட்டிக்காட்டுகிறது. ஐக்கியம் என்பது காணக்கூடிய உறவின் அனுபவம். தேவ ராஜ்யத்தின் ஐக்கியத்தின் முழு நிறைவை அது எதிர்பார்க்கிறது.அந்த ஐக்கியத்தை உணர்ந்து கொள்ளவும், வெளிப்படுத்தவும், விரிவாக்கவும் சபை உலகத்திற்குள் அனுப்பப்படுகிறது.

சாக்ரமந்துகள் தேவன் அளிக்கின்ற கிருபையைக் குறிக்கின்றது.

**ஆங்லிகன் பாப்டிஸ்ட், உலகத்தைச்சுற்றி உரையாடல்கள் 64**

ஆங்லிகன்கள் பொதுவாக அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் கிறிஸ்துவின் மரணத்தை வெளிப்படுத்தும் அடையாளங்கள் எனவும் கிறிஸ்துவின் தியாகத்தினால் விளைந்த தேவனின் கிருபையை வெளிப்படுத்தும் (நல்விளைவை ஏற்படுத்துகிற) அடையாளங்கள் எனவும் கருதுகிறார்கள்.

ஞானஸ்நானம் கிருபை தருகின்ற மன்னிப்பையும் புதிய எதிர்காலத்திற்குரிய வாக்குத்தத்தத்தையும் உறுதிப்படுத்துகிறது.

**ஆங்லிகன் ஆர்த்தடாக்ஸ் இறையியல் விவாதம்,திரியேக தேவனின் சபை 29**

ஞானஸ்நானம் மன்னிப்போடு மிகச்சரியாக இணைந்திருக்கிறது ஏனென்றால் அங்கு பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறார். மன்னிப்பு என்பது புதிய தரமான மனித உறவுகளுக்கும் எதிர்காலத்துக்கும் மனித நேயத்தை திறந்து விடுவது. மன்னித்தல் என்பது ஒருவரை அடையாளம் கண்ட பின்பு அவளுடைய அல்லது அவனுடைய கடந்த கால அல்லது நிகழ்காலத்தின் அடிப்படையில் அல்ல அதையெல்லாம் விட்டு விட்டு அந்த நபருக்கு ஒரு நல்ல எதிர்காலத்தைத் தருவதாகும். அது கடந்த காலத்தை குணமாக்கி கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனித நேயத்தை உணர்ந்து கொள்ளுதல்.

கிறிஸ்து தருகின்ற பாவத்திலிருந்து விடுதலையை சாக்ரமந்துகள் நினைவூட்டுகின்றன.

**ஆங்லிகன் ஆர்த்தடாக்ஸ் இறையியல் விவாதம் கிறிஸ்துவின் ஒப்புமை மற்றும் சாயலில் .26**

பாவத்திலிருந்து விடுதலை என்பது கிறிஸ்துவின் அன்புக்குக் கீழ்ப்படிதலில் இணைந்திருக்கும் விடுதலை. அதாவது கிருபையில் தேவனுக்காக விடுதலை என்பது இயேசுக்கிறிஸ்துவானவர் ஞானஸ்நானத்தின் மூலமாக திரும்ப அளிப்பதும் நற்கருணையின் மூலமான மறு உறுதிப்படுத்துதலும் ஆகும். "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்". யோவான் 8:36

இந்த விடுதலைக்குள் செல்வது நமது மற்றும் நமது சபையின் வாழ்நாள் பணியாகும்

**ஆங்லிகன் மெதடிஸ்ட் சர்வதேச கமிஷன், எல்லா உலகத்திற்குள்ளும் 51**

சபையாக இருப்பது, கிறிஸ்தவராக இருப்பதைப்போலவே முன்னேறிச்செல்லக்கூடிய பணியாகும். ஞானஸ்நானத்திற்கு ஏற்ப வாழ்வது ஒரு வாழ்நாள் முழுவதும் நடக்கக்கூடிய செயல். ஒரு சபையாக வாழ்வதில் பிரமாணங்கள் கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து அவருடைய இரட்சிப்பின் பணி பின்பு அவருடைய வருகை வரையில் விவரிக்கின்றது.

சாக்ரமந்துகளின் மூலமாக அழைக்கப்பட்ட சபை தேவனின் பணிக்காக பலப்படுத்தப்படுகிறது.

**ஆங்லிகன் ஆர்த்தடாக்ஸ் இறையியல் விவாதம் திரியேக தேவனின் சபை 8**

சாக்ரமந்துகளில் இருக்கும் தேவகிருபை இரகசியம்,

அப்போஸ்தல போதனையிலும் ஐக்கியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபத்திலும் (அப் 2;42) ஏழைகளுக்கு இரங்குவதிலும் (அப்2;44,45 ரூ 4;32) உள்ள அர்ப்பணிப்பின் மூலமாக வெளிப்படுத்தப்படும் தேவனையும் மனிதனையும் நேசிக்கும் அன்பு– உலகத்தில் வாழ்வதற்கு நேராக வழிநடத்துகிறது.

? உங்கள் சபையின் சாக்ரமந்து வாழ்க்கை தேவ ராஜ்யத்தின் அடையாளமாகவும் முன்னுகர்வாகவும் இருப்பதை அனுபவித்திருக்கிறீர்களா? இந்த ரகசியத்தில் எவ்வாறு உங்கள் சபை ஒரு மிகப்பெரிய வழியில் ஈடுபடமுடியும்?

## 8. ஐக்கியம் என்றால் என்ன?

அண்மைகாலத்திற்குரிய பரவலாக வரவேற்கப்பட்ட ஒருங்கணைந்த சபைகளின் கூற்று சமகால சபைகளில் இந்த முக்கியமான கேள்விக்கு வேதாகமப்பின்புலத்தை அளிக்கிறது.

**உலக சபைகளின் சங்கம். சபை; ஒரு பொதுவான நோக்கத்திற்கு நேராக 13**

சபையில் பரிசுத்த ஆவியின் மூலமாக விசுவாசிகள் இயேசுக் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள், அப்படியே அவர்களோடு பேசுகிறவரும் நம்பிக்கைக்குரிய பதில் நடவடிக்கைக்கு நம்மை அழைத்தவருமான பிதாவோடு உயிரூட்டமுள்ள ஒரு உறவில் பங்குகொள்கிறார்கள். வாழ்க்கை மற்றும் சபை ஒற்றுமை பற்றிய பொதுவான புரிந்துகொள்ளுதலுக்கான ஒருங்கிணைந்த சபைகளின் தேடலுக்கு வேத கருத்தான கிறிஸ்தவ ஐக்கியம் (koinonia) என்பது மிகவும் முக்கியமானது இந்தத்தேடல், "ஐக்கியம் என்பது சபைகள் அது இப்போது இருக்கும் நிலையில் ஒன்றிணைந்து இருப்பது மட்டும் அல்ல" என்பதை அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. "கொய்னோனியா" எனும் பெயர்ச்சொல் (ஐக்கியம், பங்கு பெறுதல், நட்புணர்வு, பங்கிடுதல்) "ஒன்றைப்பொதுவாகப் பெற்றிருத்தல்," "பங்கிடு," "பங்கு கொள்," "ஒரு பங்கை பெற்றிரு," "ஒன்றாக செயல்படு" எனும் பொருள்கள் தருகின்ற ஒரு வினைச்சொல்லில் இருந்து பெறப்பட்டுள்ளது. இந்த வினைச்சொல் கர்த்தரின் இராவிருந்தை விவரித்தல், (1கொரி 10;16,17) பவுல் பேதுருவோடு ஒப்புறவாகுதல், மற்றும் யாக்கோபு யோவானோடு ஒப்புறவாகுதல்,(கலா 2;7–10) அனைத்து ஏழைகளையும் (ரோமர் 15;26,2கொரி 8;3,4) கிறிஸ்துவுக்கு மகிமையாக சபை எதிர்கொள்ளுதல், (அப். 2:42–45) போன்றவற்றை விவரிக்கும் பகுதிகளில், காணப்படுகிறது. ஆகவே சபை தானாகவே சுயமாக இருக்காமல், தேவனால் நிறுவப்பட்ட ஐக்கியமாக, சபை தேவனுக்குரியதாய் இருக்கிறது. சபை தனக்கே உரித்தான இயல்பிலே மிஷனரியாக தேவனுடைய ராஜ்யத்தில் தேவன் நோக்கமாகக்கொண்ட அனைத்து மனிதத்துவத்திற்கும் அனைத்து படைப்புகளுக்குமான ஐக்கியத்திற்கு தன் சொந்த வாழ்க்கையில் சாட்சியாக வாழ அழைக்கப்பட்டும், அனுப்பப்பட்டும் இருக்கிறது.

? சபைகளுக்கு இடையேயான உறவுகளின் ஐக்கியத்திற்கு நடைமுறையில் எவற்றை உள்ளீடுசெய்யவேண்டும்?

**ஒற்றுமை,விசுவாசம்,ஒழுங்கிற்கான இன்ட்டெர் ஆங்லிகன் நிரந்தர கமிஷன், 1.12**

முதலில் அப்போஸ்தல விசுவாசத்திலும் ஒழுங்கிலும்,ஒரே பரிசுத்த கேத்தலிக் அப்போஸ்தல சபையின் சகோதரத்திருச்சபை என ஒருவரையொருவர் அங்கீகரித்தல் இரண்டாவதாக ஒருவருக்கொருவர் அர்ப்பணித்து வாழவும் ஐக்கியத்தில் ஒன்றாக செயல்படவும் சபை சரியான வழியில் இதைச்செய்தல். மூன்றாவதாக சபையின் சாக்ரமந்துகளில் பரஸ்பரமாக தடையில்லாமல் பங்குபெறுதல், அதாவது ஒரு பொதுவான ஞானஸ்நானம்,பகிர்ந்தளிக்கப்படும் நற்கருணை போன்ற பொதுவாக நியமிக்கப்பட்டவற்றை அநுசரித்தல். இந்த 3 பரிமாணங்களான சபையாக ஒருவரையொருவர் அங்கீகரித்தல் ஒருவருக்கொருவர் அர்ப்பணித்தல் சாக்ரமந்துகளில் பங்குபெறுதல் போன்றவை சபை ஐக்கியத்தின் முக்கியமான அங்கங்கள்

இருந்த போதிலும் உடன்படாமைக்கும் ஒருவரையொருவர் கேள்வி கேட்கவும் மரியாதையான கருத்துப்பகிர்விலும் விவாதச்சூழலிலும் இடம் உண்டு

**இன்ட்டெர்–ஆங்லிகன் இறையியல் மற்றும் கோட்பாட்டுக் கமிஷன் ஐக்கியம், முரண்பாடும் நம்பிக்கையும் .113, 114**

ஐக்கியம் நன்றாக செயல்பட ஒருவருக்கொருவர் கணக்கொப்புவித்தல் மற்றும் தொடர்பு கொள்ளுதல் அவசியமாகிறது. ஒரு தனிப்பட்ட மேலும் அதிகமான உடன்படாமை உள்ள இறையியல் சொற்களஞ்சியம் முரண்பாட்டு எல்லைகள் கடந்து தொடர்ச்சியாகத் தொடர்புகொள்ள அவசியமாகிறது. மேற்கண்ட கவனித்தல், பதில் வினையாற்றுதல், ஆழமாக சிந்தித்தல், கேள்வி கேட்டல், போன்றவை கிறிஸ்துவின் சரீரத்தில் ஐக்கியமாக இருப்பதின் ஆற்றலும் ஊக்கமும் வாய்ந்த அம்சத்தைக் குறிக்கிறது. ஐக்கியம் என்பது நிலையான ஒரு உண்மை நிலை .அதை ஒருவர் பெற்றிருக்கலாம் அல்லது பெறாமலும் இருக்கலாம் என்பது அல்ல. அது திறந்த,தொடர்ச்சியான உரையாடல் மூலமாக வளர்க்கப்பட வேண்டும். அதில் ஒருவர்மேலொருவர் நம்பிக்கையும் சகிப்புத்தன்மையும் கொள்ளவேண்டும்.ஒருவர் மற்றொருவருக்கான சிறந்ததையே நினைக்க வேண்டும். சுவிசேஷத்தின் செழுமையைப் பகிர்ந்து கொள்வதில் புது வழிகளுக்காக ஜெபம் செய்து நம்பிக்கையோடு இருக்க வேண்டும். ஐக்கியத்தில் நிலைத்திருத்தல் என்பது உண்மையில் ஒரு தொடர்ச்சியான ஆலோசனையுடன் கூடிய செயல், இந்த ஒரு முயற்சியின் வழியாக சபையின் கர்த்தர் கிருபையாக பிரசன்னமாகி சபையை மேன்மையான நிலைக்கு முன்னேற்றி செல்கிறார்.

இறையியலாளர் ஸ்காட் மாக்டூகல் (Scott MacDougall) இம்மாதிரியான ஐக்கியம் எவ்வாறு 5 அடையாளங்களை வெளிப்படுத்துகிறது என விவரிக்கிறார். என்னவென்றால் அது கடுமையானது. (அதாவது இந்த உலகத்தில் இருக்கிற வரப்போகின்ற உலகத்தில் உள்ள தேவ ராஜ்யத்திற்கான பலவந்தம்) மற்றவர்களுக்குத் திறந்திருக்கிறது, துணிவான காரியத்துக்கு ஆயத்த நிலையில் இருப்பது, நம்பிக்கையாக, விசுவாசமாக இருப்பது.

? மரியாதையான விவாதத்திற்குப் பின்பு வரும் உடன்படாமை கிறிஸ்தவர்களை இன்னும் வலிமையான ஐக்கியத்திற்குள் வழிநடத்திச் சென்ற ஒரு நிகழ்வை விவரி. இது சபை வாழ்க்கையை எவ்வாறு மேலும் ஊக்குவிக்கிறது?

## 9. எவ்வாறு ஒருங்கிணைத்து சொல்லலாம்?

ஆங்லிகன் உடன்படிக்கை என்பது 2009 ற்கான ஒரு அறிக்கை. சில பிராந்தியங்கள் மட்டும் அதை ஏற்றுக்கொண்டன.

முழு ஆங்லிகன் ஐக்கியமும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சில பிராந்தியங்கள் அதை ஏற்க மறுத்தன. காரணம் நான்காம் பகுதியில் உள்ள ஒரு திட்டவரைவு (முன்மொழிதல்). ஆரம்பப்பகுதிகள் சபை பற்றிய ஆங்லிகன் கோட்பாட்டின் நல்ல தொகுப்பு அளிக்கின்றது என பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதல் பகுதி முதலில் குறிப்பிடப்பட்ட பல கூற்றுகளை எடுத்தாண்டு மிகச்சரியாக இந்த அத்தியாயத்தை தொகுத்து அளிக்கின்றது.

**ஆங்லிகன் உடன்படிக்கை**

பகுதி1: விசுவாசத்தை நம் மரபுரிமையாகிக்கொள்ளுதல்

1.1 ஒவ்வொரு சபையும் உறுதியளிக்கின்றது.

1.1.1 ஒரே பரிசுத்த கேத்தலிக் அப்போஸ்தலத்திருச்சபையின் ஐக்கியத்தையும், ஒரே உண்மையான தேவனை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரை ஆராதனை செய்தலையும்

1.1.2. கேத்தலிக் அப்போஸ்தல விசுவாசம் பரிசுத்த வேதத்தில் தனித்துவமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கேத்தலிக் விசுவாசப்பிரமாணத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது .இந்த விசுவாசத்தை புதியதாக ஒவ்வொரு தலைமுறைக்கும் அறிவிக்க சபை அழைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து சபையின் முக்கியமான கொள்கைகள் ஐரோப்பிய சீர்திருத்த சூழலில் அமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆங்லிகன் ஐக்கியத்தில் விசுவாசத்திற்கு உண்மையாக சாட்சியளிக்கும் விதமாக பலவழிகளில் ஏற்புடையதாக்கப்பட்டிருக்கிறது.

1.1.3. பரிசுத்த வேதமான பழைய புதிய ஏற்பாடுகள் இரட்சிப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் கொண்டிருக்கிறது. அதுவே சட்டமாகவும் விசுவாசத்தின் முழுநிறைவான தரநிலையாகவும் இருக்கிறது.

1.1.4 அப்போஸ்தலப்பிரமாணம் ஞானஸ்நானத்தின் அடையாளமாகவும், நிசேயா விசுவாசப்பிரமாணம் கிறிஸ்தவ விசுவாசத்திற்குப் போதுமான அறிக்கையாகவும் இருக்கிறது.

1.1.5.கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட இரு சாக்ரமந்துகளான ஞானஸ்நானமும் நற்கருணையும், நிலைத்து நிற்கிற கிறிஸ்துவின் வார்த்தைகளோடும் நியமிக்கப்பட்ட அதன் கூறுகளோடும் கடைப்பிடிக்கப்படவேண்டும்

1.1.6 சபை ஒற்றுமைக்குள் தேவனால் அழைக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்களின் பல்வேறு தேவைகளுக்கேற்ப முக்கியமான மேலாண்மை நிர்வாக முறையை உள்ளூருக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளுதல்

1.1.7. பகிர்ந்து கொள்ளப்பட்ட பொதுவான ஜெப முறை மற்றும் நமது தேவனை ஆராதிக்கும் முறை, நமது விசுவாசம், நமது வாழ்க்கை, இவை எல்லாவற்றையும் ஒன்றாக உருவாக்கி, நிலை நிறுத்தி, வளர்த்தெடுக்கப்பட்ட வழிபாட்டு முறை

1.1.8 தேவனின் அனைத்து மக்களின் அப்போஸ்தல த்திருப்பணியில் சபையின் பங்கு மற்றும் இந்த உடன்படிக்கைக்கு அப்பால் இந்தத்திருப்பணி மற்ற சபைகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

1.2 ஒவ்வொரு சபையும் பரிசுத்த ஆவியில் சார்ந்து தம்மை பரிசுத்த ஆவிக்கு ஒப்புவித்து பல்வேறு சூழலில் விசுவாசத்தைத்தன் உடைமையாக்கிக் கொண்டு அதற்கேற்ப வாழுதல்

1.2.1 ஆங்லிகன் ஐக்கிய சபைகளிடமிருந்து பெற்றுக்கொண்டபடியே பொதுவான சபைகளின் ஐக்கியம் மற்றும் நம்முடைய ஒருங்கிணைந்த சபைகளின் ஒப்பந்தம் என்பதைக்கருத்தில் கொண்டு தேவ வசனத்திற்கு, கேத்தலிக் மற்றும் அப்போஸ்தல விசுவாசம், ஒழுங்கு , பாரம்பரியத்திற்கு ஏற்ப போதிக்க, செயல்பட

1.2.2. பரிசுத்த வேதாகம போதனையிலும்,கேத்தலிக் பாரம்பரியத்திலும் வேர்கொண்ட மற்றும் பதிலளிக்கக்கூடிய கிறிஸ்தவ இறையியல், தார்மீகப்பகுத்தறிவு மற்றும் ஒழுக்க முறைகளைத்தாங்கி அறிவிப்பதற்கு

1.2.3 இந்த அறிவில் மனிதத்துவம் புதுப்பிக்கப்பட,கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் உருவாக்கப்பட்ட முழு ஒழுங்கிற்கும்,கர்த்தர் கொடுத்த, தமது மக்களிடமிருந்து தேவை என்று கேட்கிற பரிசுத்தத்தை சிந்திக்க சாட்சியாக வாழ்வதற்கு

1.2.4 தேவ வசனத்தை கேட்பதற்கு, படிப்பதற்கு முக்கியமானதைக் குறித்துக்கொள்ள, கற்றுக்கொள்ள, நமது பல்வேறு சூழலில் தேவ வார்த்தையைப் புரிந்து கொள்ள, குழுவாகச் சேர்ந்து வாசித்து கவனமுடன் கேட்டுத் தெரிந்துகொள்ள–பிஷப்கள் மற்றும் சினாடின் போதனையினாலும், சாதாரண மற்றும் அறிஞர்களின் கருத்தூன்றிய மிக்க விழிப்புணர்ச்சியால் செய்யப்படுகின்ற ஆய்வினாலும், விசுவாசமுள்ள அனைவரும் சத்தியத்திற்கு பலமுள்ள சாட்சியாக இருக்க

1.2.5.தேவ வார்த்தை சபையையும் அதன் உறுப்பினர்களையும் அவர்கள் மூலமாக தனிப்பட்டவர்களையும், பண்பாட்டையும், சமுதாயத்தையும், தொடர்ந்து, பிரகாசமடையச்செய்து, மறுரூபப்படுத்துகிறது என்பதையும், வேதாகம உரைமூலம் பெறப்பட்டு, வாசிக்கப்பட்டு, உணமையாக, மரியாதையுடன், விரிவாக, ஒத்திசைவாக விளக்கப்பட்டுள்ளது என்பதையும், உறுதிப்படுத்த

1.2.6.இந்த உலகத்தில் சுவிசேஷத்தின் வல்லமைக்கு தேவ பிள்ளைகள் தைரியமான சாட்சியாக விளங்குவதற்கு, ஊக்கமளிக்க– ஊழியத்திலும் தேவ பணியிலும் தீர்க்க தரிசன மற்றும் உண்மையான தலைவர்களை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள

1.2.7. தேவனுக்குக் கீழ் அனைத்து கிறிஸ்தவர்களின் ஐக்கியத்தையும் முழுவதுமாக உணர்ந்து அறிந்துகொள்ள முயற்சி செய்து, பொது விதிகளுக்கு ஏற்ப, எல்லா விஷயங்களிலும் புனித கடமைகளுக்கு ஆதரவளித்து நற்கருணையை பின்பற்றி, நிலைநிறுத்த

1.2.8. கர்த்தருடைய முழு சரீரத்துடன் தொடர்ச்சியாக, ஒரு பொதுவான யாத்திரையைத்தொடர உண்மையின் முழுத்தன்மையையும் அறிந்துகொள்ள,

அனைத்து நாட்டு மக்களும் விடுதலை பெற்று கர்த்தர் இயேசுக்கிறிஸ்துவுக்குள் புதிய செழிப்பான வாழ்க்கை வாழ ஆவியானவர் உண்மைக்குள் வழிநடத்திச் செல்கிறார்

? இந்த கூற்றுகளில் உங்கள் சபை வாழ்க்கையில் எது மிகக்கடினமானது? எவ்வாறு உங்கள் சபை பதில் வினையாற்றும்?

கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கை பண்ணும் யாவருடன் சேர்ந்து நாம் தேவனின் திருப்பணியைச்செய்கிறோம். அவருடைய மறுரூபப்படுத்தும் அன்பை உலகத்திற்குக்கொண்டுவர அனைத்து மனுக்குலத்தோடு சேர்ந்து வேலை செய்ய தேவ திருப்பணி நம்மை அழைக்கிறது.

சபை முழுவதும் அடையாளம் காணுதலில முக்கியமான பங்கு வகிக்கிறது. பொர்வொ அறிக்கை 1993 செழுமையான கருத்தால் இதை விவரிக்கிறது.

**பொர்வொ பொதுவான அறிக்கை 20**

சபை என்பது தெய்வீகமான உண்மை. அது பரிசுத்தமானது. இப்போது வரையறுக்கப்பட்ட உண்மையை மேம்பாடு அடையச்செய்யும். அதே நேரத்தில் ஒரு நிறுவனமாக மனித சமூகத்தின் தெளிவற்ற பலவீனமான நிலையில் அதன் உடைந்த தன்மையை வெளிப்படுத்துகிறது. சபை எப்பொழுதும் மனம் திரும்ப, சீர்திருத்தப்பட, புதிதாய் மாற எப்பொழுதும் தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும், சார்ந்து வாழ, அழைக்கப்படுகிறது. சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் வாழும் சபையின் தெளிவான உருவப்படத்தை வேதம் தருகிறது.

- சபை என்பது, கிறிஸ்துவானவரின் அன்பிலும் கிருபையிலும் வேர்கொண்டு நிலைத்திருக்கிறது.
- எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிறது.ஜெபத்திலே நிலைத்திருக்கிறது. துன்பங்களின் மத்தியிலும் நன்றி செலுத்துகிறது.
- சபை பிரயாணம் செய்யும் ஒரு யாத்ரீகன், சபை என்பது,தேவ மக்களாக புதிய வானத்தின் குடியுரிமையுடன் பரிசுத்த ஜாதியாக ராஜ ஆசாரியத்துவத்துடன் பிரயாணம் செய்யும் ஒரு யாத்ரீகன்.
- சபை என்பது,எல்லா நேரங்களிலும் உலகெங்கிலும் உள்ள எல்லா சபைகளிலும் பொதுவாக உள்ள விசுவாசத்தை அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணமாக வார்த்தையிலும் வாழ்க்கையிலும் பொதுவாக அறிக்கை செய்யும்
- சபை என்பது எல்லாருக்குமான பணியை உடையது.ஒவ்வொரு இனத்திற்கும் நாட்டிற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது பாவ மன்னிப்பு, ஞானஸ்நானம் எடுத்தல் , நற்கருணை எடுத்தல் போன்றவற்றை அறிவிக்கும் பணியை உடையது.
- ஒவ்வொரு இடத்திலுமுள்ள தேவ பிள்ளைகளை ஒருங்கிணைத்து போஷித்து அவர்களை ஒன்றுபடுத்தி சகல பரிசுத்தவான்களின் முழு ஐக்கியத்திற்குள் உலகளாவிய சபையோடு இணைப்பதற்கு தேவனால் அனுப்பப்பட்டு நியமிக்கப்பட்ட அப்போஸ்தல ஊழியம் சபைக்கு சேவை செய்வதாக இருக்கிறது.
- மனித குலத்தின் பிரிவினைகளுக்கு மத்தியில், தேவனின் குணமாக்கும் மற்றும் ஒற்றுமைப்படுத்தும் வல்லமையை, காணக்கூடிய ஐக்கியத்தின் மூலமாக, சபை வெளிப்படுத்துகிறது.

- இந்த உலகத்தில் செயலூக்கமுடைய சாட்சியாக விளங்குவதற்கும், அப்போஸ்தல விசுவாசத்தைப் பாதுகாப்பதற்கும் விளக்குவதற்கும் முடிவுகள் எடுப்பதற்கும் அதிகாரமுடையவராய்ப் போதிப்பதற்கும் பொருட்களைத் தேவையில் உள்ளவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கும் ஏதுவாக சபையின் ஐக்கியப்பிணைப்பு பலமுள்ளதாக இருக்கிறது.
- அது உயிருள்ள திருச்சபையாகவும், தேவன் அதற்கு முன்பு வைத்துள்ள நம்பிக்கைக்கும் தேவன் சுதந்திரமாக தமது மக்களுக்களிக்கும் பங்காகிய செல்வத்திற்கும் மகிமைக்கும் தேவனை நம்புகிற யாவருக்கும் தேவன் தமது வல்லமையினாலே திறந்து வைத்திருக்கிற அளவில்லாத வளங்களுக்கும் பதில்வினைபுரியக்கூடியதாகவும் இருக்கிறது.
- சபையின் இந்த உருவ விளக்கம் முழுமையானது அல்ல.இருந்தபோதிலும், எப்பொழுதும் தேவையாயிருக்கிற மனந்திருப்புதல் மற்றும் புதுப்பித்தலுடனும்,நமது வாழ்க்கையின் நம்பகத்தன்மைக்கு உரிய சவால்களுடனும் இந்த சபை பற்றிய விளக்கங்கள் நமது சபையை எதிர் கொள்கிறது.

? இந்த புல்லட் பாயின்ட்களில் எது உங்கள் சபை திருப்பணி செய்ய அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிறது. அவ்வாறு திருப்பணி செய்யும் சபையாக மாறுவதற்கு எந்த நடைமுறை விஷயங்கள் தேவைப்படுகிறது?

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

ஆங்கிலிக்கன் ஐக்கியம்
165 - நாடுகள்

கே.யூ.தி.செ. பப்பிளிகேஷன்ஸ்
திருவனந்தபுரம்